32

[REGIS]TERED No. M. 6165. ந. பை. 13

பத்ஹுல் இஸ்லாம்
FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஜுலை—1958.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - JUL 1958
MADRAS

விஷயம்	பக்கம்
இஸ்லாம் என்னும் நீர் அருவி[illegible]	1
திருக் குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ...	9
சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர்	13
தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள் (ரஹ்மத் பாகவி)	23
இஸ்லாமின் தறுத்தீபு (கோட்டாறு. பு. ஷெய்கு அபூபக்கர் ஆலிம் ஸாஹிபு)	26
மாபிலம் மறக்க முடியாத மாவீரர்	27
17 முறை படையெடுத்த பாரசீகமன்னன் (சிறுவர் பகுதி) ([illegible] ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)	29

[illegible]இஸ்லாம் ஆபீஸ்:
[illegible]ட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

JL
[illegible]
N88
187676.

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1–50
தனிப் பிரதி நயா பைஸா 0–13
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

மஜ்மூஅ முனாஜாத்து

சுத்தத் தமிழ்
(இரண்டாம் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு பேரில் முனாஜாத்து, யாஸைய்யிதி மாலை, யாகுத்பா மாலை, தலை பாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, முத்துமணி மாலை, பக்தி ஆனந்த பாத்தி முத்து மாலை, முஹியித்தீன் முனாஜாத், காஜாபந்தே நவாஸ் முனாஜாத்து, ஸரசுவதி மாலை, காஸீம் புலவர் இன்னிசை, கல்யாண வாழ்த்துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.
இதன் விலை ந. பை. 52

ஷி அரபுத் தமிழ் விலை ரூ. 1 – 28

கிடைக்குமிடம் :—
ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

பத்ஹுல் இஸ்லாம்

ஜுலை—1958.

இஸ்லாம் என்னும் நீர் அருவியைக் கலக்காதீர்கள்

குற்றாலம் நீர் வீழ்ச்சியைக் கண்டிருப்பீர்கள். உயரமான மலை மேலிருந்து, தெள்ளத்தெளிந்த நன்னீர் அருவி யொன்று, உருக்கி வார்க்கும் வெள்ளிக் குழம்பு போல், வெண்ணிறக் கம்பிபோல், மேலிருந்து கீழ் நோக்கி வீழ்ந்து கொண்டிருக்கிறது.

அந்த நீர் அருவி வந்து விழும் வேகத்தில் சிதறிப் பரவி, தேங்கி நின்று, அங்கிருந்து பெருக்கெடுத்துக் கால்வாயில் செல்கிறது. அந்தக் கால்வாய் பிறகு சிற்றாருகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. அந்தச் சிற்றாறு பெரிய ஆருகப் பெருக்கெடுத்து, புரண்டு, பல ஊர்களையும் பல காடுகளையும் கடந்து போய்க் கொண்டிருக்கிறது.

இந்த நீர் அருவி உதாரணம், நம் இஸ்லாம் என்னும் சுத்த சத்திய சன்மார்க்கத்திற்கும் மிகப் பொருந்தும். இன்றைக்கு 1400 வருஷங்களுக்கு முன், அரபியா தேசத்தில், மக்கா என்னும் நகரை யடுத்துள்ள ஹிராஎன்னும் குகைக்குள் ளிருந்து "இக்ரஃ பிஸ்மி ரப்பிகல்லதீ..." என்ற அரிய ஒலி யொலியுடன், அந்த இஸ்லாம் என்னும் சாந்தி மயமான நீர் அருவி புறப்பட்டது.

பிறகு அந்த நீர் அருவி, கொஞ்சம் பரவி, மக்கா நகரில் பெருக்கெடுத்து வாய்க்காலாயிற்று. பிறகு அது மதீனு நகரிலும் பரவி

ஆறுகப் பெருக்கெடுத்து நன்ருய்ப் பிரவகித்து ஓடியது. அதன் பின் அது மற்றும் காடுகளுக்கும் பெரிய ஆறுகப் பெருக்கெடுத்து ஓடி, பல தேச மனித சமுதாயம் என்னும் ஹிருதய நிலத்தை யெல்லாம் ஈரமாக்கி, அதிலிருந்து, சத்தியம் ஒழுக்கம் நற்குணம் ஏக தெய்வத் துவம் சகோதரத்துவம் என்னும் தான்யக் கனிகளெல்லாம் ஏராள மாய் உண்டாகும் வண்ணம் பாய்ந்து எங்கும் செழிப்பையும் க்ஷேமத் தையும் உண்டாக்கியது.

இஸ்லாம் என்னும் நீர் அருவி, பற்பல திக்கிலும் ஆறுகளாய் பெருக்கெடுத்து ஓடியதால், உலக மக்களின் ஹிருதய மென்னும் களர் நிலமெல்லாம் விளை நிலமாகி, புஞ்செய் எல்லாம் நஞ்செய் ஆகி, காடு மேடெல்லாம் பூஞ் சோலையாகி, கரடு முரடு எல்லாம் தோப் புத் துறவுகளாகி, எங்கும் பச்சை பசே லென்று, இஸ்லாமியக் குர்ஆன் என்னும் கொடி பறக்க, எங்கும் சாந்தி மயமாய் காட்சி யளிக்கலாயிற்று.

ஆயிரம் வருஷங்களுக்கு, முன் பரிசுத்த தீனுல் இஸ்லாத்துக்கு உலகமெல்லாம் வெற்றி கிடைத்து, அதன் மூலம் உலக மக்கள் ஆத் மார்த்தத் துறையில் சுபீக்ஷ மடைந்து, சுமுகமாய் வாழ்ந்திருந்த காலத்தையே இங்கு விசேஷமாகக் குறிப்பிடுகின்ருேம்.

குற்ருலம் மலை உச்சியிலிருந்து நீர் அருவி கீழே வந்து விழும் போது மிகத் தெளிந்த துல்லியமான தூய தண்ணீரே வந்து வீழ் கிறது. அதில் தூசியோ, மாசோ, மண்ணோ, மருவோ, புழுதியோ கலந்திருப்பதில்லை. அந்த சுத்தமான தண்ணீர், நீர் தேங்கும் ஸ்நானக் கட்டத்தில் வந்து வீழ்ந்த பின்னர் சிறிது 'கலங்கல்' அடைந்து விடு கிறது. அதாவது, அந்தக் குளிர்ந்த நல்ல நீரில் குளிக்க வரும் ஜனங்கள், முதலில் அதை கலக்கி அசுத்தப் படுத்துகிருர்கள். சிலர் எண்ணெய் பூசிக் கொண்டு வந்து நின்று குளித்து, தண்ணீரில் எண் ணெய்ப் பசையை உண்டாக்கி விடுகிருர்கள். பிறகு, அரைப்பு, சீக் காய், சோப்பு போன்ற பொருள்களால் தண்ணீரை இன்னும் அதிக மாய் அழுக்குப் படர்ந்ததாய்ச் செய்து விடுகிருர்கள். அது மட்டு மல்ல, சிலர் அதில் துணிகளையும் துவைத்து கசக்கி, அழுக்காக்கி அசுத்தப் படுத்துகிருர்கள்.

அது தான் போகட்டு மென்ருல், அந்த அருவி வாய்க்கால் வழி ஓடி, நதியாகப் பெருக்கெடு, ஆறுகப் பிரவாக மெடுத்துப் பற்பல ஊர்

களுக்குக் குடி நீர் தந்து, நீர் பாய்ச்சி, நிலங்களைப் பசுமையாக்கிக் கொண்டு போகிறதே அப்போது, ஊர் ஜனங்கள் அந்தத் தண்ணீரை என்ன விதமாக வெல்லாம் அசுத்தப் படுத்துகிருர் என்பதை, நாம் சிறிது சிந்தித்துப் பார்ப்போமாக.

சில, ஆற்றுப் படுகையில், எருமை மாட்டைக் கொண்டு போய் குளிப்பாட்டுகிருர்கள். துணிகளை வெளுக்கும் வண்ணர்கள், அத்தண்ணீரை பல வகையில் அசுத்தப் படுத்துகிருர்கள். நாய்களும், குதிரைகளும், கழுதைகளும் கூட தண்ணீர் குடிக்க வந்து, அந்தத் தண்ணீரில் மூத்திரம் பெய்து, சாணம் போட்டு கெடுத்து விட்டுப் போகின்றன.

ஆற்றுப் படுகைகளிலும், ஆற்றங் கரையிலும் நடக்கும் அக்கிரமங்கள் இன்னும் பலவாகும். ஒருவன் ஒருவனைக் கொலை செய்து அந்த ஆற்று வெள்ளத்திலேயே போட்டு விட்டுப் போய் விடுகிருன். ஒருத்தி, தான் கள்ளத் தனமாய் கொண்ட கர்ப்பத்தினல் பிறந்த குழந்தையை அந்த ஆற்று வெள்ளத்தில் தூக்கி எறிந்து, தன் பாவத்தை அதில் கரைத்துக் கலக்கிப் போக்கி விட்டதாக எண்ணிக் கொண்டு போகிருள்.

சில பேர் வழிகள், அந்த ஆற்றங் கரையிலே பிணத்தை கொண்டு வந்து கொளுத்தி, சாம்பலாக்கி அந்த நீற்றை, அந்த ஆற்று நீரிலேயே கரைத்து விட்டு, எலும்புகளையும் அதிலேயே போட்டு மந்திரம் சொல்லி விட்டுப் போய் விடுகின்றனர்.

இத்தியாதி காரியாதிகளால், அந்த ஆற்று வெள்ளம் எவ்வளவு அசுத்தம் கலக்கப்பட்டு, களங்க மடைந்து, கெட்டுப் போகிற தென்பதை அதைக் கெடுப்போர் எண்ணிப் பார்ப்பதே இல்லை.

இந்த உதாரணத்தை, 1000 வருஷங்களுக்கு முன் இருந்த தீனுல் இஸ்லாத்தின் தூய நிலைமைக்கும்—இப்போதுள்ள தீனுல் இஸ்லாத்தின் (முஸ்லிம் சமூகத்தின்) கெட்டுப் போய் சீர் அழிந்த ஒழுங்கற்ற நிலைக்கும் ஒத்திட்டுப் பார்க்குமாறு வேண்டிக் கொள்கிருேம்.

நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், ஹிரா குகையிலிருந்து இஸ்லாம் என்னும் நீர் அருவியை, வாய்க்கால் வழியாக மக்காவுக்கு கொண்டு வந்தார்கள். அவ் வாய்க்கால் சிற்ருராக மதீனவுக்குப் போய்ச் சேர்ந்தது. அங்

திருந்து பெரிய ஆறாகப் பெருக்கெடுத்து உலகமெல்லாம், பல்லாறு களாக மாறி, பல திக்கிலும் இஸ்லாம் மதம் சென்று பரவியது.

சில பேர்கள், இஸ்லாம் என்னும் ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்துப் போய் பல்லோர்க்கும் பிரயோஜனப் படாதவாறு தடுத்து வைத்து, அணை கட்டி, குளம் வெட்டி, தண்ணீரைத் தேக்கத் தொடங்கி விட்டனர். இஸ்லாத்தின் ஏக தெய்வத்துவம், சகோதரத் துவம், பரஸ்பர விசுவாசம், வணக்க ஒழுக்கம் என்னும் தூய அம்சத்தைக் கெடுத்து அதில் பற்பல கொள்கைகளையும், பழக்க வழக்கங்களையும், சண்டை சச்சரவுகளையும், ஷிர்க்கு பித்அத்தான செயல்களையும் கொண்டுவந்து புகுத்தி, அதன் பரிசுத்தத்தைக் கெடுக்கலாயினர்.

வேறு சிலர் அந்த இஸ்லாம் என்னும் அருவியின் நீரை அணை கட்டித் தேக்கி, அதனை அசுத்தப் படுத்தி, அதற்கு ஷீஆ என்றும், அஹ்லெ குர்ஆன் என்றும், அஹ்லே ஹதீஸ் என்றும், ஸூபி இயக்கம் என்றும், தரீக்கத் என்றும் இன்னும் என்னென்னவோ பெயர் வைத்துக்கொண்டு தனித்தனி வகுப்பினராய் போய் விட்டனர்.

ஹிஜ்ரீ 2-வது நூற்றாண்டிலேயே, இஸ்லாத்தின் தூய அருவியில், வேற்றுமை வித்தியாசம் கொள்கைத் தகராறு என்னும் குப்பைக் கூளங்களைப் பலர் கொண்டுவந்து போடத் தொடங்கி விட்டனர்.

இரண்டாவது நூற்றாண்டு முடிவடைவதற்கு முன்னதாகவே, குர்ஆன்-ஹதீது விஷயமாக, முஸ்லிம்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் தொடங்கி விட்டன. அரபு நாட்டுத் தூய ஆசாரப் பழக்க வழக்கங்களில், யூனானியர் (கிரேக்கர்) உடையவும், அரபு அல்லாத அஜமீகளுடையவும் பழக்க வழக்க ஒழுங்கீனங்கள் நாகரீகங்கள், என்ற பெயரால் வந்து புகுந்து கொள்ளத் தொடங்கின.

குர்ஆன் போதனையான கித்தாபும், ரஸூலுல்லாஹ்வின் போதனையான ஹதீது ஸுன்னத்தும் குதர்க்க அர்த்தங்கள் புரியப் பட்டு, திரித்து மாற்றி பொருள் கூறப்பட்டு களங்கங்களாக்கப் பட்டன. அதன்பின் வந்தவர்கள், சரியான குர்ஆன் போதனை எது? சரியான ஸுன்னத் படிப்பினை எது? என்றுகூட தெரிந்து கொள்ள இயலாத முறையில், இஸ்லாத்தில் பல குழறுபாடுகள் வந்து புகுந்துக் கொண்டன.

குர்ஆன் ஹதீது போதனைகளுக்கிடையில் "இல்மெ தஸவ்வுப்" என்னும் ஒருவகை ஞானத்தத்துவங்கள் கொண்டு நுழைக்கப்பட்டன.

அதன் பெயர் 'தஸவ்வுப்' என்றும்' 'தரீக்கத்' என்றும், 'மஃரிபத்' என்றும் வைக்கப்பட்டது. இவ்வகை தஸவ்வுப், மஃரிபத், தரீக்கத்களுக்கு, அதன் கர்த்தாக்கள் குர்ஆன்-ஹதீதுகளிலிருந்தே ஆதாரங்களைத் துருவித் தேடி எடுத்துக் கொண்டனர். எனினும், அதன் அந்தரங்க அர்த்தங்களை விட்டு, குதர்க்கமான மறை பொருள்களை கற்பனை செய்து, தம் சிஷ்ய கோடிகளுக்கு பிரசாரம் செய்து வந்தார்கள்.

எனவே, அக்காலை 'இல்மெ தஸவ்வுப்' என்னும் ஞானத்தத்துவ வேதாந்த விசாரமே சரியான இஸ்லாம் என்று, பெரும்பாலோரால் பின்பற்றப்பட்டு வந்தது. இதனால் சரியான தீனுல் இஸ்லாம் போதனை ஒதுக்கித் தள்ளப்பட்டது.

மதீனாவில் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின், அத்தியந்த தோழர்களில் ஒரு சாரார் இருந்தனர். அவர்களுக்கு 'அஸ்ஹாபே ஸுப்பா' என்று பெயர் இருந்தது. அந்த ஸுப்பாக்கள், சதா மதீனா திருப்பள்ளி வாசலில், நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் திருச் சமுகத்திலே பெரும்பாலும் இருப்பர். மற்ற நேரங்களில் மஸ்ஜிதில் தொழுதுக் கொண்டும், தியானத்தில் ஈடுபட்டுக் கொண்டும் இருப்பார்கள்.

இந்த "அஸ்ஹாபே ஸுப்பாக்கள்" உலக விவகாரங்களில் ஈடுபட மாட்டார்கள். தேசியத் துறையிலோ, அரசியல் விவகாரங்களிலோ, உலக சம்பாதனைகளிலோ ஈடுபட மாட்டார்கள். இரவும் பகலும் தொழுகை வணக்கத்திலும், குர்ஆன் ஓதுவதிலும் ஈடுபட்டிருப்பார்கள். ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அப்போதுக்கப்போது திருவுளமாகும் ஹதீதுகளை மனனம் செய்து பாடம் பண்ணிக் கொண்டு ஒப்பிப்பார்கள்.

இவர்கள், சம்பாதனை அல்லது சாப்பாட்டு விஷயங்களில் அக்கறை கொள்ள மாட்டார்கள். பள்ளியில் வந்துஇருக்கும் யாராவது நல்லோர் உணவு, கொண்டு வந்து கொடுத்தால் அதை வாங்கி உண்பார்கள். பேரீச்ச மரத்திலிருந்து பழுக்காத குலைகளை வெட்டிக் கொண்டு வந்து, பள்ளி வாசலில் பந்தம்காலில் கட்டித் தொங்கவிட்டு விடுவார்கள். பிறகு அதில் பழுத்து உதிரும் ஈச்சங் கனிகளை மட்டும் எடுத்துத் தின்று, நீர் அருந்தி, பசிப்பிணியை போக்கிக் கொண்டு பழையபடி தொழுகை வணக்கத்தில் ஈடுபட்டிருப்பார்கள்

இப்படியும் சொற்ப உணவு சௌகர்யமும் கிடைக்காத காட்களில் அந்த 'அஹ்லெ ஸுப்பாக்கள்'' காடுகளுக்குப் போய் விறகு வெட்டிக் கொண்டுவந்து, அதை யாருக்காவது விற்று கிடைக்கும் சொற்ப காசுக்கு உணவுப் பொருள் வாங்கி வந்து காலக்ஷேபம் செய்வார்கள். தனவந்தர்கள் தானதர்மம் காணிக்கை கொடுத்தாலும் வாங்கிக் கொள்வார்கள்.

இத்தகைய உத்தம "அஹ்லெ ஸுப்பாக்"களையே தாங்கள் பின்பற்றுவதாக பிற்கால "ஸுபியாக்கள்" சொல்லிக் கொண்டார்கள். உண்மையில் அந்த "ஸுப்பா"க்களுக்கும் இந்த "ஸூபி"களுக்கும் கொஞ்சங்கூட சம்பந்தம் இல்லை யென்றே தெரிகிறது.

ஏனெனின், "ஸூபியாக்கள்" என்போர் பொதுப்படையாக ஆடம்பரப் பிரியர்களாகவே இருந்துவந்தனர். இன்றும் அவ்வாறே இருந்து வருகின்றனர். 'ஸூபிகள்' தங்களுக்கென்று தனி உடை உடுத்துக் கொள்கின்றனர். சிஷ்ய கோடிகளை ஏராளமாகச் சேர்த்துக் கொண்டு, அவர்களின் உழைப்பால், கொழுக்கத் தின்று சுகபோகம் அனுபவிக்கின்றனர். கப்ருகளையும் தர்க்காக்களையும் பொதுக் கட்டிடங்களையும் ஆதாரமாக வைத்துக் கொண்டு, இலட்சக் கணக்காக, ஆயிரக் கணக்காக, நூற்றுக் கணக்காக பணத்தைப் புரட்டி விவகாரம் நடத்துகின்றனர்.

நபிகள் நாயகத் திருச் சமுகத் தொண்டர்களான "ஸுப்பாக்கள்" எப்படி இருந்தனர்? பிற்காலத்து 'ஸூபிகள்' எப்படி மாறினர்? இக்காலத்து 'ஸூபிகள்' எனப்படும் பீர்-மஷாயிக்-ஷெய்கு, ஸெய்யது மார்கள், எப்படியெப்படி யெல்லாம் காஷாய வேஷதாரிகளாய் இருக்கின்றனர்? என்பதை இங்கு அதிகம் விளக்கிக் கூறத் தேவை யில்லை.

குர்ஆன் வழியாகவும், ரஸூலுல்லாஹ் உடைய ஸுன்னத்து (ஹதீது) வழியாகவும், பிரவகித்து ஓடி வந்த நீரூற்று ஆற்று வெள்ளமே இன்று உலகமெல்லாம், இஸ்லாம் மயமாக பசுமை நிறம் படர்ந்து காணப்படுகிறது. ஆனால், இஸ்லாம் என்னும் ஆற்றுப் பெருக்கை, நீர் நிலையை, ஏரியை, நீர்த்தேக்கத்தை, அணைக்கட்டை இக்காலத்துச் சில முஸ்லிம் 'அறிவாளிகள்' என்பவர்கள், தங்கள் சுயநலங் கருதியும், விஷமச் செயலுக்காகவும், கலக்கி குழப்பி, அழுக்காக்கி, களங்க முடைய தாக்கி வருகின்றர்.

இஸ்லாத்தில், இக்காலை எத்தனையோ தவறான கொள்கைகள் வந்து புகுந்து கொண்டன. எத்தனையோ தப்பான நடத்தைகள் முஸ்லிம்களிடையே வியாபித்து கலந்து போயிருக்கின்றன. எத்தனையோ கட்சிப் பிரதி கட்சிகள் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றன. உட்பிரிவுகள் எத்தனையோ, நம் முஸ்லிம்களிடம் குடி கொண்டிருக்கின்றன.

எந்த ஊரில் போய்ப் பார்த்தாலும், இரண்டு பள்ளிகளும் இரண்டு ஜமாஅத்து கட்சிகளும், வெவ்வேறு போக்கில் இருப்பதைக் காணலாம். அங்ஙனமின்றி, ஓர் ஊரில் ஒரே பள்ளி இருந்தாலும் அதிலும் இரண்டு ஜமாஅத்து--கட்சிகள் இருப்பதைக் காணலாம். ஒரு பள்ளியின் நிர்வாகம் அந்த இரு கட்சிகளின் ஆதிக்கத்திலும் இருக்க வேண்டு மென்ற தகராறு இருப்பதையும் காணலாம். சில சமயம் தகராறு முற்றிக் கோர்ட்டு கச்சேரி வரைபோய், பல வருஷங்களாய் தீர்ப்பு ஆகாமல், பொதுப் பணமும் நல்ல செல்வமும் பாழாய்ப் போவதையும் காணலாம்.

இவ்வாறாக, எத்தனையோ ஊழல்கள் நம் முஸ்லிம்களிடையே இக்காலை காணப்படுகின்றன. நம் முஸ்லிம்கள், உலக விவகாரங்களில், சச்சரவுகளும் வேற்றுமைவிரோதங்களும் புரிந்து கொண்டு உழல்வதைப் பற்றி நமக்கு சிரத்தை யில்லை. ஆனால் இஸ்லாமிய ஆசாரத்தில், மத விவகாரத்தில், பள்ளி நிர்வாகங்கள், பொது விஷயங்கள், சமூக சீர்திருத்தத் துறையில், இஸ்லாமிய வைதீகக் கல்வி விஷயத்தில், பிள்ளைகளையும் பெண்மணிகளையும் இஸ்லாமிய சம்பிரதாய முறைப்படி அழைத்துச் செல்வதில் காணப்படும் சச்சரவுகளையும், வேற்றுமைகளையும், விரோதங்களையும் கண்டுதான் நாம் கண்ணீர்விட வேண்டியதாய் இருக்கிறது.

எனவே, முஸ்லிம் சோதரீர்! இஸ்லாம் என்னும் தெளிவான நீர் அருவியைக் கலக்காதீர்கள். நம் சமுதாய மென்னும் நீர் தேக்கத்தில், அனுசார அட்டூழிய குப்பைக் கூழங்களை கொண்டு வந்து போடாதீர்கள். இஸ்லாம் என்னும் ஆற்று நீர், வாய்க்கால்களை எப்போதும், சுத்தமாய் இருந்து நமக்கும் நம்மைச் சேர்ந்தவர்களுக்கும் பயன் தருமாறு பாதுகாத்துக் கொள்ளுங்கள். எல்லாம் வல்ல, அருள் உடையவனான அல்லாஹ்வும் உங்களைப் பாதுகாத்துக் கொள்வான். ஆமீன்!

அலி றலியல்லாஹு அன்ஹு
அவர்களின் மகனார்

முஹம்மது ஹனீபா யுத்த சரித்திரம்

இதில் ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா அவர்களின் தாயாராகிய ஹனீபா பீவியுடன் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் யுத்தஞ் செய்து ஜெயித்து, அவர்களை நிக்காஹ் செய்து விட்டுப் போனதும், பிறகு ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா பிறந்து தாயிடம் வளர்ந்து தமது பிதாவாகிய அலி றலியல்லாஹு அன்ஹுவைத் தேடிச் சென்று பிதா வென்று அறியாமல் யுத்தம் புரிந்ததும் பிறகு ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா அவர்கள் பூததேவுகளுடன் யுத்தம் புரிந்து பீவி ஸைனுல் அறபை விவாகம் செய்ததும், ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களை எஸிது என்பவன் ஷஹீது செய்து, ஹஸரத் இமாம் ஸைனுல் ஆபிதீன் அவர்களையும் ஹஸ்ரத் நபி நாயகம் அவர்களின் வீட்டாரையும் சிறையிட்ட விஷயமாகத் தாங்கள் புறப்பட்டு போகும் போது உமர் அலி, தாலிப் அலி, ஆகில் அலி, மூஸிப்காகான், இப்ருஹீம் உஷர்த்து, தோஹான் மோஹான் முதலிய பிரக்யாதி பெற்ற வீரர்களோடு மதீனமாநகரஞ் சென்று உத்பா வலீது என்பவர்களுடனும், மர்வானுடனும் எஸீதுடனும் பல ஊர்களில் பல விதமாய் மகா வீரியத்துடன் அதிசயிக்கத் தக்க விதமாய் யுத்தஞ் செய்து எஸீதுடைய படைகளை முறிய அடித்தும் ஜெயித்தும், மர்வானுடைய மூக்கையும் காதையும் அறுத்தும் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுடைய பழிக்கு பதில் பழி வாங்கி சிறையை மீட்டியதும், ஹஸரத் ஸைனுல் ஆபிதீன் அவர்களைப் பட்டத்தில் உட்கார வைத்ததும், எல்லா அரசாங்கத்தையும் தங்களுக்குள்ளடக்கி ஆண்டதுமான எல்லா விஷயங்களும் மிக அருமையாயும் தெளிவாயும், எழுதப்பட்டிருக்கிறது.

புதிய பதிப்பு கலிகோ பைண்டு விலை ரூ. 3-00

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(37-வது பகுதி)

திருக் குர்ஆன் : : : :

: : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஷ்மத் பாகவி)

தியாகம் புரிபவர்க்கு இரம் சுவர்க்கம் உண்டு

(திருத்தூதர்) றஸூலும் அவருடைய நம்பிக்கையுள்ள தோழர்களும், தங்களுடைய பொருள் கொண்டும் இன்னுயிர் கொண்டும் தியாகம் (சத்யப்போர்) புரிகின்றனர். அவர்களுக்கே உலகத்தின் நன்மைகளும் மறுமையின் நன்மைகளும் உண்டு. இன்னவர்களே ஜெயம் பெறக்கூடியவர்களாவர். இவர்களுக்கு அல்லாஹ் 'இரம்' என்னும் சுவர்க்க வனத்தை உண்டாக்கி வைத்திருக்கிறான்; அதன் கீழ் நன்னீர் நதி ஓடிக் கொண்டிருக்கும். (ஜுஸு: வஃலமு; ஸூரா: அத்தவ்பா; ருகூ 11)

அசக்தர்களும் நோயாளிகளும் தியாகம் புரிய வேண்டிய தில்லை

யாரிடம் செலவுச் சாதனமில்லையோ அப்படிப்பட்ட பலஹீனர்களும் நோயாளிகளும், நிர்ப்பந்தமாய் தர்ம யுத்தத்தில் கலந்து கொள்ள (தியாகம் புரிய) முடியவில்லையானால், அவர்கள் மீது இதற்காக குற்றம் இல்லை; ஆனால் அவர்கள் அல்லாஹ்வுக்கும் திருத்தூதருக்கும் வாஸ்தவத்தில் நன்மை கோருபவர்களாக இருக்க வேண்டும். நல்ல மனிதர்கள் மீது எவ்வித குற்றச்சாட்டும் கிடையாது. அல்லாஹ் அவர்களை மிகவும் மன்னிக்கிறவனாக இருக்கின்றான். இன்னும் நபித் திருத்தூதர் உங்களிடம் வந்து கோரிக் கொள்ளும்போது, குதிரை (முதலிய யுத்த சாதனம்) கொடுத்து உதவுபவர்கள், (இயலாத காரணத்தால்) தர்ம யுத்த களத்திற்கு வர முடியாதுபோனால் அவர்கள் மீதும் எவ்வித குற்றமும் இல்லை. இன்னும் உங்களில் சிலர் (உங்களிடம் நபி உதவி கோரி) வந்தபோது—"எம்மிடம் எவ்வித வாகனமும் கிடையாது; உங்களுக்கொன்றும் உதவி செய்ய முடியாது" என்று கூறியபோது திருத்தூதர் ஏமாற்றத்துடன் திரும்பி விட்டார். இந்த வியாகூலத்தால் அவருடைய கண்களிலிருந்து நீர் வரத் தொடங்கியது. அவர்களிடம் நல்ல காரியத்திற்கு உதவி யெய்ய செல்வ சாதனம் இல்லையே"

என்று வருத்தப்பட்டார். (ஜுஸூ: வஃலமூ, ஸூரா: அத்தவ்பா; ருகூ. 12)

மாய மந்திரம் கற்பவர்க்கு மறுமையில் அது பயன்படாது

அல்லாஹ்வின் புறத்திலிருந்து, அவனுடைய திருத்தூதர் வந்து, ஏற்கெனவே அவர்களிடம் இறைவனுடைய திருவேதம் வந்திருந்து அதை அவர்கள் உண்மையாக்கி வைத்திருந்தும், அந்த வேதக்காரர்களில் ஒரு பகுதியினர், அல்லாஹ்வுடைய வேதத்தை ஒரு பக்கம் (பின்னால்) தூக்கி எறிந்து விட்டு, அதை அவர்கள் அறியாதவர்களைப்போல் பாவனை செய்தனர். அதற்குப் பதிலாய் அவர்கள் மாயமந்திர சூன்யத்தை கற்றுக்கொள்ளலாயினர்; இதை ஷைத்தான்கள் (நபி) ஸுலைமானுக்குக் கற்றுக்கொடுத்திருந்தனர்; ஆயினும் ஸுலைமான் நபி காபிராய் இருக்கவில்லை; ஷைத்தான்கள் தான் காபிர்களாய் இருந்தனர்; அவர்கள் ஜனங்களுக்கு மாய மந்திர ஜாலம் கற்றுக் கொடுத்து வந்தனர். இன்னவர்களோ, இந்த வித்தையை, பாபில் நகரத்தில் (முற்காலத்தில்) இருந்த ஹாரூத்—மாரூத் என்ற மலக்குகளுக்கு ஆண்டவன் கற்பித்ததிலிருந்து பின்பற்றி நடந்து வந்தனர். ஆனால் அவ்விருவரும் பிற ஜனங்களுக்கு அந்த வித்தையை சாதாரணமாக கற்றுக் கொடுப்பதில்லை. அப்படி யாராவது கேட்டால், “நாங்கள் ஒரு வகையான குழப்பக்காரர்களாய் இருக்கிறோம்; இதை நீங்கள் கற்றுக் கொண்டால் காபிராய்ப் போய் விடுவீர்கள்” என்று சொல்வர்; (பிறகு வற்புறுத்தினால்) கற்றுக் கொடுப்பார்கள். அப்படியிருந்தும் (சில) ஜனங்கள் இந்த வித்தையை (கேட்டு) கற்றுக் கொள்வார்கள். இந்த (மாய) வித்தையைக் கொண்டு அவர்கள் கணவன்-மனைவிக்கிடையில் விரோதத்தை உண்டாக்குவார்கள். ஆனால், அல்லாஹ்வுடைய ஆக்ஞை யில்லாமல் அவர்கள் யாருக்கும் தீங்கு செய்ய இயல மாட்டார்கள். ஒரு பிரயோஜனமும் இல்லாததும் (சுயமே) பிறருக்குத் தீங்கு செய்ய இயலாததுமான ஒரு விஷயத்தை அவர்கள் (சிரமப்பட்டு) கற்றுக் கொள்கிறார்கள். உண்மையில் இந்த வித்தையை விலைக்கு வாங்கி (கற்றுக்) கொள்பவர்க்கு, மறுமையில் (ஆகிரத்தில்) ஒரு பிரயோஜனமும் தரமாட்டா தென்பதையும் அவர்கள் நன்கறிந்தே இருந்தார்கள். அவர்கள் கொஞ்சம் பகுத்தறிவை செலுத்திப் பார்த்து (இறைவனிடம்) நன்னம்பிக்கையும் கொண்டு நற்காரியங்களும் புரிந்து வந்திருப்பார்களாயின், அல்லாஹ்வினிடத்தில் தகுந்த (புண்ய) பலாபலன் பெற்றிருப்பார்கள். (ஜுஸூ: அலிப்லாம்மீம்; ஸூரா: பக்ரா; ருகூ. 12)

'ஜிஸ்யா' தண்டவரி யாரிடமிருந்து வாங்க வேண்டும்?

வேதக்காரர்களில் சிலபேர், அல்லாஹ்விடமும் இறுதித்தீர்ப்பு நாள் விஷயத்திலும் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்; அல்லாஹ்வும் அவனது திருத்தூதரும் 'ஹராம்' என்று சொல்லிய (விலக்கி வைத்த)தை விட்டுப் பேணிக்கொள்ளவும் மாட்டார்கள். இன்னும் இவர்கள் சத்திய மார்க்கமாகிய-இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். ஆகவே முஸ்லிம்களாகிய நீங்கள் இவர்களை எதிர்த்து (தர்மப்) போர் புரியுங்கள். ஒன்றிருக்கில் அவர்கள் ஜிஸ்யா (தண்டவரி) கொடுக்கட்டும்; அல்லது பணிந்து (தாழ்ந்து) இருக்கட்டும். (ஜுஸு: வஃலமூ; ஸூரா: தவ்பா; ருகூ: 4)

மதுபானமும் சூதாட்டமும் மகாப் பாதகங்களாகும்

(நபி முஹம்மதே) உம்மிடம் (பாமர ஜனங்களாகிய) அவர்கள், மதுபானம் பண்ணுவதைப்பற்றியும், சூதாடுவதைப்பற்றியும் கேள்விகள் கேட்கிறார்கள். நீர் அவர்களுக்கு (இவ்வாறு பதில்) சொல்லி விடுவீராக—'இவ்விரண்டு விஷயங்களிலும் மாபெரும் பாதகம் (பாபம்) இருக்கிறது; (சில விஷயத்தில்) பிரயோஜனமும் இருக்கிறது. ஆனால் அதன் தீங்கு அதன் பிரயோஜனத்தைவிட மிகப் பெரியதாகும்' (என்று சொல்லி விடுவீராக). இன்னும் அவர்கள் (அல்லாஹ்வுடைய மார்க்கத்தில்) எதை யெதை செலவு செய்யலாம் என்றும் (கேள்வி) கேட்கின்றார்கள். (அவர்களுக்கு இவ்வாறு பதில்) சொல்வீராக:—'(முஸ்லிம்களே) உங்களிடத்தில் (அவசியத்துக்குப்போக) மிச்சமாக இருப்பதில் (அல்லாஹ்வுடைய பாதையில்) அதிகம் செலவு செய்யுங்கள். இவ்விதமாக அல்லாஹ் தன்னுடைய ஆக்ஞைகளை எடுத்து உரைக்கின்றான்—நீங்கள் இதைப்பற்றி யோசித்துஉணர்வீர்கள் என்பதற்காக. (ஜுஸு: ஸயகூல்; ஸூரா: பகரா; ருகூ. 27)

குடி, சூது, வாதிலிருந்து தப்பித்து நடந்துகொள்க

(முஸ்லிம்களே,) மதுக்குடித்தல், சூதாடுதல், விக்கிரஹப்பூசை, சகுனம் (குறி) பார்த்தல் இதெல்லாம் ஷைத்தானுடைய அருவருப்பான காரியமாகும். இதை விட்டும் நீங்கள் ஒதுங்கி (தப்பித்து) நடந்து கொள்ளுங்கள். இதனால் நீங்கள் ஜெயம் பெறுவீர்கள். ஆனால் ஷைத்தானோ மதுக்குடியினாலும் சூதாட்டத்தாலும், உங்களிடத்தில் பகைமையையும் வேற்றுமையையும் போடுவதற்கு விரும்புகிறான். இன்னும் உங்களை அல்லாஹ்வுடைய தியானத்தை விட்டும்

தொழுகை வணக்கத்தை விட்டும் விலக்கி வைக்கவும் விரும்புகிறான். இதையெல்லாம் உணர்ந்த பின்பேனும், நீங்கள் இக்காரியங்களை விட்டும் ஒதுங்கி யிருக்கப்போகிறீர்களா? இல்லையா? எனவே அல்லாஹ்வுக்கும் அவனது திருத்தூதருக்கும் (பணிந்து) வழிபட்டு நடந்து கொள்வது உங்கள் மீது கடமையாகும். இதன் பிறகும் நீங்கள் (அல்லாஹ்வுக்கு வழிபடுவதினின்றும்) முகம் திரும்பிப் போய் விடுவீர்களாயின், இதை நன்றாய் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்: அல்லாஹ்வுடைய கட்டளைகளை உங்களுக்கு எடுத்துச் சொல்லி விளக்கிவிட வேண்டியதுதான் எமது திருதூதர் (நபி) உடைய (பொறுப்பான) வேலையாகும்; (உங்களை நல்வழிக்குக் கொண்டு வருவது அவரது கடமையல்ல.) (ஜுஸ்உ: வஇதா ஸமிஊ; ஸூரா: அல்மாயிதா; ருகூ: 12)

முதல்லல் கோஷா நாமா

கோஷா பர்தா விஷயத்தைப் பற்றி ஹக் தஆலாவின் கலாமாகிய தலீல்களிலும் நமது நபி நாயகமவர்களின் திரு மொழியாகிய ஹதீதுகளிலும் வந்திருப்பவைகளைக் கல்விக் கடல்களாகிய முஹத்திஸின்களும், முபஸ்ஸிரீன்களும், முஜ்தஹிதீன்களும் தெண்டித்து விபரித்தெழுதி யிருப்பவைகளில் சிலதை சுருக்கமாக சேகரித் தெழுதி **முதல்லல் கோஷா நாமா** வென்று பெயர் வைத்து தற்கால ஆலிம் மவ்லவிகளில் மஹான்களாகிய பத்து உலமாக்கள் பார்வையிட்டு அச்சிடப்பட்டது. இவைகளெல்லாம் வசனமாகக் கூறப்பட்டு இருக்கின்றன.

பின்பு இவைகளெல்லாம் சுலபமாக மனதில் வைத்துக் கொள்ளும் பொருட்டு பாடல்களாக போடப்பட்டு இருக்கின்றன.

இதன் விலை ரூ. 0 – 52

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 0 – 80

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

சிறைப் பறவை சிப்கத்துல்லா

அல்லது

துப்பு துலக்கிய தூயவர்.

அத்தியாயம் 21.

ஸென்ட்ரல் பஸ் நிற்குமிடத்தில் பஸ்ஸிலிருந்து ரஜாக் இறங்கி வேலூருக்கு மூன்றும் வகுப்பு டிக்கட் வாங்கிக் கொண்டார். "தப்லீக்" என்னும்" வாரப் பத்திரிகையையும் "இஸ்லாம்" என்னும் மாத சஞ்சிகையையும் புத்தகக் கடையில் வாங்கிக் கொண்டார். காலியாகக் கிடந்த ரயில் பெட்டியில் ஏறி ஒரு மூலையில் அவர் அமர்ந்து கொண்டார். வண்டி வேலூர் போய் சேரும் வரை மார்க்க சம்பந்தமான கட்டுரைகளைப் படித்துக் கொண்டிருந்தார்.

வேலூர் ரயில்வே ஸ்டேஷனில் அனேக வாடகை டாக்ஸிகளும் ஆட்டோரிக்ஷாக்களும் நின்று கொண்டிருந்தன. மிகச் சொற்ப கூலி பெற்றுக் கொண்டு அவரை அவர் போய்ச் சேர வேண்டிய இடத்துக்குக்கொண்டு விடுவதற்கு அவை சித்தமாக விருந்தன. டிரைவர்களின் அழைப்பை அசட்டை செய்து, கையில் குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு அவர் நடக்கலானார்.

ரஜாக்கான் வந்திருக்கிறார் என்ற சமாசாரத்தைச் சொல்வதற்கு பணியாள் பரீது வந்து நின்ற போது சுருட்டுப் பிடித்த வண்ணம் சிந்தனையி லாழ்ந்திருந்தார் கரீமுல்லா.

"கான் சாஹிப், வயோதிகரொருவர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார். அவர் யார் என்பது எனக்குத் தெரிய வில்லை. பெயர் ரஜாக்கான் என அவர் சொல்லிக் கொள்கிறார்."

கரீமுல்லாவின் புருவங்கள் நெளிந்தன.

"ரஜாக்கானா? அவர் எத்தகைய மனிதர்?"

"வயோதிகர், மெலிந்தவர், துப்பறியும் தொழிலுக்கு இலாயக்கற்றவர் போல காணப்படுகிறார். இஸ்லாமிய இதழ் எதற்காவது சந்தாக்கள் திரட்டு வதற்காக வந்திருப்பவர் போல காணப் படுகிறது."

பணியாள் பரீதின் இந்த வர்ணனை அநியாயமானதல்ல, ஆதாரமற்றதல்ல. கரீமுல்லாவுக்கு இந்த விஷயம் தெரியும்.

"அவரை உள்ளே அழைத்து வா. உனது வாயை மூடிக் கொண்டிரு. துப்பறிபவரிடையே மிகத் திறமை வாய்ந்தவர் இவர் என்பதை மனத்திலிறுத்திக் கொள்."

"பிரபல துப்பறியும் சிங்கமா?"

"ஆம், அவரை அழைத்து வா. மரியம் எங்கே?"

"அறையில் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். சிப்கத் துல்லாவுக்குச் சின்ன எஜமானியம்மாள் எழுதிய கடிதம் "நேசமும் பாசமுமிக்க—" என்று ஆரம்பிக்கிறது."

"உனக்கு எப்படித் தெரியும்?"

"அதை நான் வாசித்துப் பார்த்தேன்." வெட்கங்கெட்ட வேலையாள் சொன்னான். "தூரத்திலிருந்தே வாசிக்கும் சக்தியை எனது கண்கள் பெற்றிருக்கின்றன. சிறு பையனாக இருக்கும் பொழுது அச்சகத்தில் அலுவல் பார்த்திருக்கிற படியால் தலை கீழாக வாசிப்பதற்கும் பழகி யிருக்கிறேன்."

"சரி, ரஜாக்கானை உள்ளே அழைத்து வா! எனது கடிதங்களில் எதையாவது தலை கீழாகப் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டேனானால் உன்னைத் தலை கீழாகப் புரட்டி விடுவேன். வாயாடாதே! வாதம் செய்யாதே"

பயமுறுத்தல்களுக்குப் பணிந்து பயந்து விடுபவனா பணியாள் பரீது. வழக்கம் போல வைது கொண்டே அங்கிருந்து நகர்ந்தான்.

ஒரு கையில் கழற்றிய தொப்பியுடனும் மற்றொரு கையில் மடக்கிய குடையுடனும் ரஜாக்கான் உள்ளே வந்தார். அவரது முகத்தில் கவலையின் ரேகை படர்ந்திருந்தது.

"அஸ்ஸலாமு அலைக்கும், கான் சாஹிப்" கைகளிலிருந்த சாமான்களைக் கீழே வைத்துக் கொண்டே வந்தவர் சொன்னார். "தென்றல் காற்று வீசும் இக்காலையில் வீட்டுக்குள் அடை பட்டுக் கிடப்பது வெட்கமும் வேதனையும் தரும் செயலாகும். ரோஜா மலர்கள் நிறைந்த பூந்தோட்டம் எனது வீட்டில் இருந்தால்......"

"பூந்தோட்டத்தில் நான் இருக்க வேண்டு மென்று விரும்புகிறீர்களா, சரி, அங்கே போகலாம் வாருங்கள்."

கதவின் சாவித் துவாரத்தில் காது வைத்து அவர்களது சம்பாஷணையை ஒற்றுக் கேட்டுக் கொண்டிருந்த பரீது மெதுவாக அவர்களைச் சபித்துக் கொண்டான்.

பசும் புல் தரை வழியாக கரீமுல்லாகானும் ரஜாக்கானும் நடந்து சென்று கொண்டிருந்த போது இரண்டாமவர் சொன்னார். "நேற்று ஒரு பூந்தோட்டத்தில் நான் இருந்தேன். மிக நேர்த்தியான தோட்டம் அது! ஒரு பாத்தியில் நீல நிறப் புஷ்பங்கள் பூத்துக் குலுங்கின. இந் நீல நிற புஷ்பங்களைக் கண்டதும் என் தொண்டை கம்மி விடுகிறது. ஏன் என்று எனக்கு விளங்க வில்லை. சூரிய காந்தி என் கண்களுக்குக் குளிர்ச்சியும் மனத்துக்குச் சாந்தியும் அளிக்கிறது. மல்லிகையின் மணம் எனக்குச் சுவர்க்கானந்தம் அளிக்கிறது. நான் பிரஸ்தாபிக்கும் தோட்டம் கடற்கரை யோரத்தில் அமைந்திருக்கிறது. அதனைச் சுவன லோகத் தோட்டம் என்று எளிதில் வர்

ணித்து விடலாம். ஆனல் அதில் அதிக அளவில் பாம்புகள் நிறைந்து நெளிந்து கொண்டிருப்பது மனத்துக்குக் கிலேச மளிக்கிறது. நாற்காலியில் ஒரு பாம்பைப் பார்த்தேன். மற்ருெரு பாம்பு அஞ்சல் அலுவலகத்தில் கடிதங்களைத் தபாலில் அனுப்பிக் கொண்டிருந்தது. இன்னெரு பாம்பு புதர்களின் மத்தியில் மறைந்து ஒளிந்து என்னை நிழல் போல பின் தொடர்ந்து வந்தது; இந்தப் பாம்பு இனயத்துல்லாவால் அனுப்பப்பட்டதென நினைக்கிறேன்.''

''அப்படியானல் நீங்கள் எங்கு இருந்தீர்கள்?''

''கடற்கரையை நோக்கி அமைந்துள்ள அழகிய மாளிகைக்குச் சென்றிருந்தேன். பூலோகத்துச் சுவர்க்கம் என்று அதனை அழைக்கலாம். நோயிலிருந்து குணமடைந்து வரும் மனித னெருவன்-அவன் அறிவுடையவனுக விருந்தால்- அங்கு செல்வான், செல்லவேண்டும். நாற்காலியில் அமர்ந்திருந்த கனவான் குணமடைந்து வரும் ஒருவர் ஆவார்''

''காதர் கானைக் கண்டீர்களாக்கும். சரி, உட்காருங்கள்''

சலவைக்கல் ஆசனத்தை அவர் காட்டினர். திருமண தினத்தன்று 'சிறைப் பறவை' சிப்கத்துல்லா இங்குதான் உட்கார்ந்திருந்து நீண்ட நேரம் சிந்தனையி லாழ்ந்திருந்தார். அதே ஆசனத்தில் அமருமாறு இப்போது 'இராக்கால பக்ஷி' ரஜாக் கானுக்கு அழைப்பு கிடைத்தது.

''இல்லை, வேண்டாம்'' சலவைக்கல் ஆசனத்தை பார்த்துக் கொண்டே, ரஜாக்கான் சொன்னர். ''நான் கீல் வாதத்தால் கஷ்டப்படுகிறேன். ஆகவே ஓரிடத்தில் அமர்ந்து முடங்கிக் கிடப்பதைவிட உங்களுடன் நடந்து கொண்டே சம்பாஷித்துக் கொண்டிருப்பது நலம் என்று கருதுகிறேன்.'' திரும்பிப் பார்த்துக் கொண்டே அவர் சொன்னர். ''ஒற்றுக் கேட்பவர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. சில சமயங்களில் (ஜீரணிக்க முடியாத அளவுக்கு) அதிகம் கேட்டுக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. கவர்ச்சிமிக்க மனிதனெருவன் புதருக்கு அருகில் மறைந்திருந்து மருமகனின் குணதிசயத்தை அறியும் வாய்ப்பு பெற்ருர் என்று அன்று ஒரு நாள் நான் கேட்டேன். அவர் அவ்வாறு அதிகம் கேட்டது அவருக்கே நல்லதல்ல.''

தம்மையே அம்மனிதர் சுட்டிக் காட்டுகிருர் என்பது கரீமுல்லா கானுக்குத் தெரிந்து விட்டது; ஆனல் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

''எனது மகளை மிகக் கண்ணியமாக, சிறந்த முறையில் நடத்தியது குறித்து உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்—''

அவர் மேற்கொண்டு பேசாமல் சைகை மூலம் அவரை ரஜாக் கான் தடுத்து நிறுத்தினர்.

"மிகக் கவர்ச்சியுள்ள காரிகை! அழகு மிக்க அணங்கு!" ரஜாக் கான் மிக மெதுவாகச் சென்னர். "தரணியில் தப்லீஃ தழைத்தோங்கு வதில் மிகுந்த அக்கரை கொண்டவள்! ஆரணங் கொருத்தி ஆத்மீக விஷயங்களில் ஆர்வம் கொண்டிருப்பது அபூர்வம்."

எவரும் ஒற்றுக் கேட்க முடியாத தூரத்திற்கு அவர்கள் வந்து விட்டனர். மிக முக்கிய விஷய மில்லாவிடில் ரஜாக்கான் இவ்வளவு தூரம் வந்திருக்க மாட்டார் என்பது கரீமுல்லா கானுக்குத் தெரியும். ஆகவே, வந்தவர் அடுத்தபடி என்ன சொல்லப் போகிருர் என்பதை அவர் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். ஒற்றுக் கேட்பது பற்றி ரஜாக் கான் ஆரம்பித்தார்.

"எனது நண்பர்—அவரை எனது நண்பர் என அழைக்கும் உரிமையை எடுத்துக் கொள்கிறேன்— தற்செயலாகத் தன் மருமகன் கேடு கெட்ட போக்கிரி என்பதைத் தெரிந்து கொண்டார். அவர் மிக அபாயமான நிலையில் சிக்கிக் கொண்டிருந்திருப்பார். எனது நண்பர்— அவரை நான் எனது நண்பர் என்று அழைக்க அவர் அனுமதிப்பார் என்று நம்புகிறேன்— கடந்த காலத்தில் குற்றவாளி யாக இருந்திருப்பவர் அவரது வெற்றிகள் அனைத்தும் அவருடைய தந்திர சாமார்த்தியத்தின் விளைவு ஆகும். ஆனல் இது தான் விவே கம் நிறைந்த செயலா?" கரீமுல்லாவைக் கண்ணெடுத்தும் பாராமல் சுற்றுப்புற சூழ்நிலையைக் கவனித்துக் கொண்டே அவர் பேசினர்: "கரீம் ஷரீபின் மகனுக்கு நீண்டகால சிறைத் தண்டனை கிடைக்கச் செய்யவல்ல தகவலை வெளியிடுவதற்காக ரஜாக்கானை சிப்கத்துல்லா குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட அறையில்— அது எட்டாம் எண்ணுள்ள அறை என்று நினைக்கிறேன்— சந்திக்கப் போகிருர் என்ற திடுக்கிடும், பிரமிப்பூட்டும் செய்தியை கரீம் ஷரீபுக்கு எனது நண்பர் எடுத்துரைப்பது விவேகம் நிறைந்த செயலா? கரீம் ஷரீபின் கேடுகெட்ட தோழ ஞெருவனின் கையெழுத்தைப் போலிசெய்வது விவேகம் மிகுந்த செயலா? விபத்து நேர்ந்த பொழுது தப்பிச் செல் வதற்கான வழியாக கரீம் ஷரீபை வரச்செய்து சிப்கத்துல்லா என்று அவர் நினைத்துக் கொண்டிருந்த மனிதனை— உண்மையில் தனது சொந்த மகனை— சுட்டுத் தள்ளுமாறு தூண்டியது விவேகம் மிகுந்த செய்கையா? இவையெல்லாம் விவேகம் மிகுந்த செயல்களா என்று உங்களை நான் கேட்கிறேன்"

கரீமுல்லா கான் பதில் பேசவில்லை.

"தமது மகள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு எனது நண்பர் சென்று அவள் அங்கு இல்லாதிருக்கக் கண்டபோது, குறிப்பெழுதி தரையில் போட்டு விட்டுச் சென்று அதன் மூலம் எட்டாம் எண் ணுள்ள அறையில் இரவு 9-30 மணிக்கு சிப்கத்துல்லாவை அவள் சந்திக்கப் போகிருள் என்ற தவருன தகவலை காதர் கானுக்கு அளித்

தது சரியா? இத்தகைய தந்திரோ பாயத்தின் மூலம் தகுந்த தருணத்தில் விரும்பிய இடத்தில் காதர்கான் இருக்குமாறு எனது நண்பர் செய்து கொண்டார் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். மனைவியைப் பார்த்துப் பயமுறுத்திப் பணிய வைப்பதற்காக 'கிளப் இன் ஸானியத்' துக்கு காதர்கான் சென்ருன். கான்சாஹிப் நீங்கள் உலக விவகாரம் தெரிந்த மனிதர். எனது நண்பர் வெட்கங் கெட்ட தன்மையோடு நடந்து கொண்டார் என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்பது நிச்சயம். ஏனெனில், காதர் கான் கொலையுண்டிருக்கலாம்'' அவர் பலமாகப் பெருமூச்சு விட்டார், "அவனது விலை மதிக்க முடியாத உயிருக்கு உலைவைக்கப் பட்டிருக்கும் விசாரணையில் அக்கடிதங்கள் தாக்கல் செய்யப் பட்டிருந்தாலும் எனது நண்பர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கும்.''

ஷெர்வானியின் கை பாகத்தில் அவர் தூசி துடைத்துக் கொண்டார்.

"அச்சம்பவம் துக்கமும் துயரமும் நிறைந்தது. கதவுக்கு நேராக முகத்தை வைக்காமல் காதர்கான் திரும்பிக் கொண்டிருந்தது தற்செயலே யாகும். கரீம் ஷரீப் வெளியே சென்றதை எவரும் பார்க்காதிருந்ததும் தற்செயலே யாகும். மிக தந்திர மிக்க செயலின் காரணமாகவே சிப்கத்துல்லா கைது செய்யப் பட வில்லை.''

"சிப்கத்துல்லா அங்கு இருக்கவில்லை'' கரீமுல்லாகான் கார சாரமாகப் பேசினர்.

"இல்லை, சிப்கத்துல்லா அங்கு இருந்தார். அவர் அங்கு இருந்தார் என்பதை ஒப்புக் கொள்ளுங்கள். இந்த அடிப்படையை ஒப்புக் கொள்ளாவிடில் எனது சித்தாந்தங்கள் சிதறிச் சின்னபின்னமாகி விடும். என்னைப் போன்று தொழிலில் ஈடுபட்டிருப்பவனெருவன் அவனது சித்தாந்தங்கள் சிதறிச் சின்னபின்னமாவதைக் காண்பதற்குச் சகிக்க மாட்டான்.''

"எந்த விஷயத்தையும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். அன்று மாலை—சம்பவம் நிகழ்ந்த சாயங்காலம்—முழுவதும் போலீஸ் உத்தியோகஸ்த ரொருவருடன் சிப்கத்துல்லா இருந்திருக்கிருர். ஆகவே, அவரைப் போன்று தோன்றியவன் 'போலி' ஆசாமியாக இருந்திருக்கலாம்.''

"யாருக்குத் தெரியும்'' ராஜாக்கான் முணு முணுத்தார். "ஒரு மனிதனைப் போன்று மற்றொரு மனிதன் இருக்கிறுன்''

ஆகாயத்தை அவர் அண்ணாந்து பார்த்தார்.

"உங்களுக்கு காதர்கான் எவ்வித அனுகூலமும் செய்திருக்க வில்லை. மாருக, பிரதி கூலமே விளைவித்திருக்கிருன். இலட்சிய மில்லா இழிந்த மனிதன் அவன். அவனுக்கு எந்த கதியும் தகுதியானது தான்.''

(ஜூலை—1958.)

கரீமுல்லா சமயம் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென இரு வர் கண்களும் சந்தித்தன.

"உங்களுடைய பிரயாணங்களின் போது கரீம் ஷரீபைப் பற்றி நீங்கள் அதிகம் கேள்விப் பட்டிருக்கலாம். இந்த துரதிரஷ்ட நிகழ்ச்சிக்குப் பிறகு மேலும் அதிகம் தெரிந்து கொண்டிருக்கலாம். கான் ஸாஹிப், நீங்கள் ஒரு காரியம் செய்தால் மனித சமுதாயத் துக்குப் பெரும் தொண்டு செய்தவராவீர்கள்..."

"நான் இரகசியத்தை அம்பலப்படுத்த வேண்டுமென்கிறீர்களா? அந்த விஷயம் பற்றி உடனே உங்களுக்கு உறுதி கூற விரும்பு கிறேன்; காதர் கான் கயவன் என்பதைத் தவிர எனக்கு எதுவும் தெரியாது. அவனைப் பற்றி அதிகம் அறிந்திருந்தேனானால், அவனது கள்ள நாணயச் சாலையின் திறவு கோலைப் பெற்றிருந்தேனா னால், அவனது குற்றங்கள் பற்றிய அத்தாக்ஷிகளையுடையவனாக இருந்தேனானால்..."

"இவ்வித அத்தாக்ஷிகளை நீங்கள் பெற்றிருந்தால்..."

"நான் இரகசியத்தை அம்பலப் படுத்த மாட்டேன். ஏனெனில் அது முறையல்ல. தெரிந்து, வேண்டுமென்றே செய்தாலும், உணர்ச்சி வசப்பட்டு ஆத்திரமேலீட்டால் செய்து விட்டாலும் அது முறை கெட்ட செயலாகவே இருக்கும்."

ரஜாக்கான் மீண்டும் நீண்டதொரு பெருமூச்சு விட்டார். கண்ணாடியைக் கழற்றி, முகத்தைத் துடைத்துக் கொண்டு, மூக்குக் கண்ணாடிக்கும் மெருகு கொடுத்து, மறுபடியும் அதை மாட்டிக் கொண்டார்.

"அது மிகக் கௌரவம் பொருந்திய செயல்" அவர் வருத்தத் துடன் சொன்னார். "இந்த விசுவாசமும் நேர்மையும்...நல்லது இருக் கட்டும். எனக்கு ஒரு உபமானம் நினைவு வருகிறது. மனிதனும் கோழியும் ஏறத் தாழ ஒரே நிலையில் உள்ளன. சிலரக கோழிகள் ஒன்றுபட்டு ஒற்றுமையாக விருக்கின்றன; மற்ற ரகக் கோழிகளு டன் அவை ஒத்துப் போவதே யில்லை. அவை ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டாலும் ஒன்றுக்காக மற்றொன்று உயிரையே கொடுத்து உக்கிரமாகப் போரிடும். உங்கள் மகள் நலமாக விருக் கிறாள் என்று நினைக்கிறேன்."

"அவள் சௌக்கியமாக விருக்கிறாள். ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அவளுக்குப் பொழுது போகாமல் கஷ்டப்படுவாள் என்று நினைத்தேன். ஆ! அதோ அவள் வருகிறாள்." அவர் திரும்பிப் பார்த்து புல்தரை மீது ஒய்யாரமாக நடந்து வந்து கொண்டி ருந்த மகளைக் கை காட்டி அழைத்தார். தப்லீக் பற்றிப் பேசிய அம்மணிதரின் அருகில் வந்ததும், "இவர் தான் ஜனாப் ரஜாக்கான். உனக்குத் தெரியுமல்லவா" என்று அவளிடம் கரீமுல்லா கேட்டார்.

"ஏன், எனக்கு ஏற்கனவே தெரியும். என்னை தப்லீக் செய்யு மாறு தூண்டி விட்டீர்களே!"

"நீ ஏன் தப்லீஃ ஜமாஅத் ஏற்படுத்தி பெண்களிடையே பிர சாரம் செய்யலாகாது. மார்க்க விஷயங்களில் மாதர்கள் மட்டிகளாக இருப்பதோடு அதிக அக்கரை காட்டுவதில்லை. ஆகவே, அவர்களுக் கொரு முன் மாதிரியாக நீ அமையலாமல்லவா?"

அவரை கரீமுல்லா உற்றுப்பார்த்தார். அவரது குரலிலும் கண் ஒளியிலும் ஒரு வித மிடுக்கு காணப்பட்டது. ஒரே விநாடியில் அது மறைந்து விட்டது. இப்போது அவரை கரீமுல்லாவால் நன்கு விளங்கிப் புரிந்து கொள்ள முடிந்தது.

"ஜனாப் ரஜாக்கான் துப்பறியும் நிபுணர்."

கரீமுல்லா தைரியமாகச் சொன்னார். கள்ள நாணயங்களை அச் சிட்டு நாட்டில் அவற்றை புழக்கத்துக்கு விடும் கோஷ்டியைக் கண்டு பிடித்து தண்டனைக் குள்ளாக்குவதற்கென இவரை பாங்க்குகள் விசேஷமாக அமர்த்து யிருக்கின்றன.

"ஒரு துப்பறிபவரா?" அவளது கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. "தப்லீக் ஜமாஅத்தைச் சேர்ந்தவர் என்று அல் லவா நினைத்துக் கொண்டிருந்தேன்."

"இல்லை, துப்பறிபவனல்ல" ரஜாக்கான் ஆரம்பித்தார். "தப் பபிப்பிராயம் கொள்ளாதீர்கள். நான் வெறும் ஆராய்ச்சிதான் செய்து வருகிறேன். சாதாரண ஏஜெண்டாகவே இருக்கிறேனே யொழிய நான் துப்பறிபவனல்ல. 'துப்பறிபவன்' என்னும் சொல்லை நான் விரும்புவதே யில்லை. துப்பறிதலுக்கும் எனக்கும் தொலை தூரம். எனது வாழ்க்கையில் எந்த மனிதனையும் நான் கைது செய்ய வில்லை; அந்த அதிகாரமும் எனக்கு இல்லை."

"எந்த விதத்திலும் துப்பறிபவர் போல நீங்கள் காணப்பட வில்லை" அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"உனக்கு நன்றி செலுத்திக் கொள்கிறேன். நான் துப்பறிப வன் என்ற தப்பபிப்பிராயம் நிலவ வேண்டு மென்று விரும்ப வில்லை. நான் புகழும் தொழில் அது; ஆனால் அதில் அக்கரை காட்டுவ தில்லை."

சட்டைப் பையிலிருந்து பெரிய மணிபர்ஸை எடுத்தார். அதனை திறந்து ஒரு கத்தை கரன்ஸி நோட்டுகளை வெளியே எடுத்தார். அவற்றைக் கண்டதும் கரீமுல்லாவின் புருவங்கள் விரிந்து தெளிந்தன.

"இப்பணம் முழுவதையும் பயமின்றிச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டிருக்கும் நீங்கள் தைரியசாலிதான்" கரீமுல்லா கூறினார்.

"தைரியசாலி அல்ல, உண்மையில் நான் மிகப் பயங்காளி."

நோட்டுக்கத்தையிலிருந்து ஒரு நோட்டைப் பிரித்தெடுத்து ஆச்சரியத்தில் ஆழ்ந்திருந்த கரீமுல்லாவிடம் நீட்டினர். அதனை கரீமுல்லா வாங்கிக் கொண்டார்.

"ஐந்து ரூபாய் நோட்டு" என்றார் அவர்.

மற்றொரு நோட்டை எடுத்து கரீமுல்லாவிடம் ரஜாக்கான் கொடுத்தார். கையில் வாங்கு முன்பே அது நூறு ரூபாய் நோட்டு என்பதை கரீமுல்லா தெரிந்து கொண்டார்.

"அதனை எனக்காக மாற்றிச் சில்லறையாகத் தருகிறீர்களா?" என்று ரஜாக்கான் கேட்டார். "உங்களிடம் சில்லறை இல்லையா? இது போன்ற பெரும் தொகையை எவரும் வீட்டில் வைத்திருப்பதில்லை."

"உங்களுக்காக அதனை நான் மாற்றித் தருகிறேன்." என்று சொல்லிக் கொண்டே சட்டைப் பையில் கைவிட்டு மணிபர்ஸ் எடுக்க முயற்சித்த கரீமுல்லாவை அவர் தடுத்து நிறுத்தினர்.

"கள்ள நோட்டு" என்றார் அவர்.

கையிலிருந்த நோட்டை கரீமுல்லா நன்றாகக் கவனித்தார்.

"கள்ள நோட்டா இது? முடியாத காரியம். அது அசல் நோட்டு; அதில் சந்தேகமில்லை."

அந்த நோட்டை தூக்கிப் பிடித்து விளக்கு வெளிச்சத்தில் அதைக் கவனித்தார், நீர்க்குறி சரியாகவே இருந்தது. அவர் அடிக்கடி கவனித்திருக்கிற இரகசியக் குறியும் அதில் இருந்தது.

"நீங்கள் கஷ்டப்பட வேண்டியதில்லை. எல்லா சோதனைகளையும் அது திருப்தி செய்து விடும்." என்றார் ரஜாக்கான்.

"இது கள்ள நோட்டு என்று சொல்கிறீர்கள்?"

அவர் "ஆம்" என்றார். அந்த நோட்டை திரும்பவும் கரீமுல்லா கவனித்துப் பார்த்தார். கள்ள நோட்டுக்களைப் பார்த்துப் பார்த்துப் பழகி விட்ட அவர் அந்நோட்டு அசல் நோட்டு என்று நம்பினர்.

"உங்களுக்காக அதை மாற்றிக் கொடுப்பதற்கும் தயங்க மாட்டேன். எல்லாப் பணமும் இதைப் போன்றது தானா?"

ரஜாக்கான் "ஆம்" என தலையசைத்தார்.

"உண்மையிலேயே அது கள்ளநோட்டு தானா?"

தந்தையிடமிருந்து அந்த நோட்டை வாங்கிக் கொண்டே மரியம் வினவினள். "அது எவ்வாறு அச்சிடப்படுகிறது?"

வினவுக்கு விடை கிடைக்கு முன்பே அவள் ஊகிக்கலானாள். ஒரு கொடியில் அவளுக்கு விஷயம் விளங்கி விட்டது. கள்ள நோட்டுப் பேர்வழி பற்றிக் கேள்விப் பட்டிருந்த வதந்திகள் அனைத்தையும் அவள் பொருத்திப் பார்த்தாள்.

"அவர்" அவள் அலறினாள்.

"ஆம் 'அவர்' தான்" ராஜாக்கான் சொன்னார்.

"கள்ள நோட்டுப் பேர்வழி காதர்கான்தான். வாஸ்தவத்தில் எங்களால் எதனையும் நிரூபிக்க முடியாது. இப்போது நாம் உட்கார்ந்து பேசலாம்."

சலவைக்கல் ஆசனத்தில் போய் உட்காரலாம் என்று அவர் யோசனை கூறினார். புதர்களை நன்கு கவனித்து விட்டு அவர் மனம் விட்டுப் பேசலானார்.

"உங்களிடம் அநேக விஷயங்களை நான் சொல்ல வேண்டியதிருக்கிறது. ஏனெனில், உங்கள் இலட்சியங்கள் ஒருபுறமிருக்க உங்களால் உதவி புரிய முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்த நோட்டுகளுக்கு 'டிசைன்' தயாரித்தவர்கள் இருவரைத் தவிர வேறு எவரும் இருக்க முடியாது. காகிதம் தயாரித்தவர் ஒரே ஒருவர். அச்சடிக்கும் தொழிலில் சிறிது அனுபவமுள்ள எவரும் இந்நோட்டுகளை அச்சடித்து விடமுடியும். முதலில் சொன்ன அந்த இரு மனிதர்கள் லத்தீபும் புர்ஹானுத்தீனுமாவர். கள்ளத்தனத்துக்காக அவர்கள் இருவரும் சிறைவாசம் அனுபவித்திருக்கின்றனர். பத்து வருடங்களுக்கு முன்பு அவ்விருவரும் விடுதலையானார்கள். அதற்குப் பிறகு அவர்களை எவரும் பார்க்கப்படவில்லை. மூன்றாவது மனிதன் காகிதம் செய்பவன். நாசிக் நாணய சாலையிற் அவன் வேலை பார்த்திருக்கிறான். நோட்டு அச்சடிக்கும் காகிதத்தைத் திருடியமைக்காக அவன் ஏழு வருட சிறை தண்டனை அனுபவித்திருக்கிறான். அவனும் விடுதலையாகிப் பல வருடங்களாகியும் அவனையும் அதற்குப் பிறகு எவரும் பார்க்கவில்லை.

"லத்தீபும் புர்ஹானுத் தீனுமா? அவர்களைப் பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன். மூன்றாவது மனிதனுடைய பெயர் என்ன?" கரீமுல்லா வினவினார்.

ரஜாக்கான் அந்தப் பெயரைச் சொன்னதும் கரீமுல்லா சொன்னார்: "ஜக்கரிய்யாவா? அவனைப் பற்றி நான் கேள்விப்படவேயில்லை."

"உங்களால் கேள்விப் பட்டிருக்க முடியாது என்பது வாஸ்தவம். அவனைத் தேடிக் கண்டு பிடிப்பது கடினம். சாதாரணமாகச் சொல்லு மிடத்து அவன் குற்றவாளி யல்ல. அவன் இந்நாட்டில் இல்லை; மேல் நாட்டில் இருந்து கொண்டிருக்கிறான். காகிதம் தயாரிப்பதற்கு நவீன இயந்திர சாதனங்கள் அவசியமல்லவா? ஆகவே, அவன் அங்கேயே இருந்து கொண்டிருக்கிறான். அச்சடிப்பது மட்டும் இங்கு நடைபெறுகிறது."

"எங்கு?" மரியம் வினவினாள். ரஜாக்கான் புன்னகை புரிந்ததை அவள் அப்போது தான் முதல் தடவையாகக் கவனித்தாள்.

"இந்த மனிதனை நான் அவசியம் கண்டு பிடித்தாக வேண்டும் தானே அவனை நான் பிடித்து விடுவேன். இருதார மணத்துக்காக அவனைக் கைது செய்துவிட முடியும்." மரியமின் முகம் வாட்ட முற்றதை அவர் கவனித்தார். "ஆனால் நான் அக்காரியத்தைச் செய்யப் போவதில்லை. இரு தாரங்களை மணந்து இந்திய ஒரு தாரமணச் சட்டத்தை மீறிய காதர் கானைப் பிடிக்க நான் விரும்பவில்லை. கள்ள நோட்டுப் பேர்வழி காதர் கானைப் பிடிப்பதற்கு நான் விரும்புகிறேன். ஆம், அவனை அக்குற்றத்துக்காகவே கைது செய்யப் போகிறேன்."

தோட்டத்திலிருந்து இருமல் சத்தம் கேட்டது. பணியாள் பரீது தலையைச் சொரிந்து கொண்டு நின்றான்.

"கரீம் ஷரீப் வந்திருக்கிறார்" என்று அவன் அறிவித்தான்.

அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"அவனைப் பார்ப்பதற்கு நான் விரும்ப வில்லை." ரஜாக்கான் முடிவாகச் சொன்னார். மரியமைப் பார்த்து அவர் வினவினார், "நீயும் அவரைப் பார்க்க விரும்ப மாட்டாய்." பின்னர், கரீமுல்லாவைப் பார்த்து, "எனவே நீங்கள் கரீம் ஷரீபைக் காண வேண்டும்" என்று கண் சிமிட்டினார். (தொடரும்)

முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்

இது கல்விக்கடலாகிய இமாம் அப்துல்லாஹில் ஷாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்குத்துபுர் றப்பானீ வல்கவுதுஸ் ஸமதானீ ஸையிதினா முஹியித்தீன் அப்துல் காதிரில் ஜைலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காரண சரித்திரங்களில் நின்றும், கஷ்பு கருமத்துகளில் நின்றும் அருமையும் அற்புதமான ஹிக்காயத்துகளாக அறபியில் எழுதி யிருந்த கிதாபை, தமிழில் மொழி பெயர்த்து அரிய முறையில் வெளியிடப்பட்ட பெரிய நூலாகும். கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 3

மேற்படி அறபுத் தமிழ் "அல்கன்ஜுல் அப்கம் பீ மனாகிபுல் கப்துல் அஃலம்" இதன் விலை ரூ. 8

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்

((ரஷ்மத் பாகவி))

தஹஜ்ஜுத், விசேஷத் தொழுகை, தராவீஹ் தொழுகைகள் பற்றிய விளக்கம்.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமாயிருப்பதாவது:—

(ஹதீது கருத்து):— "நிச்சயமாக இரவில் ஓர் குறிப்பிட்ட நேரம் உண்டு; ஒரு முஸ்லிம் நல்லடியாருக்கு, அந்த நேரம் இணங்கி நேர்மையாய் விடுமானால்-அந்த நேரத்தில் உலகக் காரியம், பரலோகக் காரியம் எதுவாயினும், அல்லாஹ்விடம் கேட்டு அது கொடுக்கப் படாம லிருப்பதில்லை. (அதாவது துஆ அவசியம் கபூல் ஆகும்.) அந்த நேரம் ஒவ்வோர் இரவிலும் உண்டு."

தத்துவார்த்தப்படி, உண்மையில் தஹஜ்ஜுத் தொழுகையும் தராவீஹ் தொழுகையும் ஒரேவிதத் தொழுகையை குறிப்பதாகும். ஆனால் இரண்டுக்கும் இடையில் வித்தியாசம் என்ன வென்றால்: தஹஜ்ஜுத் தொழுகையை, இரவில் தூங்கி எழுந்த பின்னர் தொழ வேண்டும்; ஆனால் **தராவீஹ்** என்பது புனித ரமலான் மாதத்தில் மட்டும் இஷா தொழுகைக்குப் பிறகு-தூங்கப்போவதற்கு முன் தொழுதுக் கொள்ளும் விசேஷத் தொழுகை யாகும்.

இரவில் தொழும் ஒரு தொழுகைக்கு 'வித்ரு' என்றும் ஹதீதில் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. ரமலானில் நிலை நிற்றல்—இரவில் நிலை நிற்றல் என்றும் இதற்கு தத்துவார்த்தம் கூறப்பட்டிருக்கிறது.

* அபூஸல்மா என்பவர், ஹஜ்ரத் ஆயிஷா நாயகி (ரலி) யிடம், ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய தொழுகையின் நிலைமைகளைப் பற்றி விசாரித்தார். அதாவது, "நாயகம் (ஸல்) அவர்கள் புனித ரமலான் மாதத்திய இரவுகளில், எத்தனை ரக்கஅத்துகள் தொழுதுக்கொண்டிருந்தார்கள்?" என்று கேட்டார். அதற்கு ஆயிஷா நாயகி (ரலி) சொன்ன பதிலாவது:— "நபிகள் நாயகம் ரஸூலுல் லாஹி (ஸல்) அவர்கள், பதினொரு ரக்கஅத்துகளுக்கு அதிகமாக தொழுதுக் கொள்வது கிடையாது; ரம்லான் மாதத்தில் மட்டுமல்ல;

---

* **முஸ்லிம், மிஷ்காத்**

ரமலான் அல்லாத இதர காலங்களிலும் கூட, (இஷாவுக்குப் பின்) முதலில் எட்டு ரக்கஅத்துகளை நீளமாக (நிதானமாக) தொழுது விட்டு பிறகு மூன்று, ரக்கஅத்துகள் வித்ரும் தொழுவார்கள்'' என்பதாகும்.

தராவீஹ் தொழுகை வரலாறு

ஜைது பின் ஸாபித் (ரலி) அறிவிப்பதாவது:— நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், ரமலான் மாதத்தில், மஸ்ஜிதிலேயே, ஈச்சம் பாயினல் தடுத்து ஒரு 'ஹுஜ்ரா' செய்து கொண்டு அதனுள் சில இரவுகள் தங்கி, தொழுதுக் கொள்பவர்களாய் இருந்தார்கள். இதைக் கண்ட அநேக ஸஹாபாக்கள், நபிகள் பெருமானரை (ஸல்) சூழ்ந்துக் கொள்ள (கூட்டம் போட)த் தொடங்கி விட்டார்கள்; ஜனங்களுடைய இந்த கூட்டத்தையும் பெருக்கத்தையும் கண்டு, நாயகம் (ஸல்) அவர்கள், இரவு நேரத்தில் மஸ்ஜிதுக்கு விஜயம் செய்வதை நிறுத்தி விட்டார்கள். ஆனல் (உண்மை யறியாத) ஸஹாபாக்கள், 'ஒரு வேளை திருநபி (ஸல்) அவர்கள் தூங்கிப் போயிருக்கலாம்' என்று நினைத்துக் கொண்டு, வீட்டில் போய், சப்தமிட்டு கூப்பிடத் தொடங்கி விட்டனர். இதைக் கேட்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (வெளியே வந்து) ஸஹாபாக்களை நோக்கி, "இறைவன் உங்கள் இந்த ஆசைகளையும் அபிலாஷைகளையும் ஸ்திரப்படுத்தி வைப்பானக. ஒருக்கால், இந்தத் தராவீஹ் தொழுகையும் உங்கள்மீது பர்லாகி விடுமோ, அப்படி பர்லாகி விட்டால், நீங்கள் அதை சரிவர நிறைவேற்றி வைக்க மாட்டீர்களே — என்று பயந்த காரணத்தினல்தான் நான், இன்று இரவு (மஸ்ஜிதில் உங்களுடன்) தொழுதுக் கொள்ள புறப்பட்டு வராமல் இருந்து விட்டேன். ஆகையால் நீங்கள், உங்கள் உங்கள் வீட்டிலேயே இருந்து (தராவீஹைத்) தொழுதுக் கொள்வீர்களாக. ஏனெனின், அடியார்களின் மிகச் சிறந்த தொழுகை—பர்லான தொழுகையைத் தவிர்த்து —வீட்டில் இருந்து தொழுகிறார்களே அந்தத் தொழுகையே தான்'' என்று திருவுளமானுர்கள்.

† நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது:— அல்லாஹு தஆலா ஒவ்வொரு இரவும், உலகத்தை யடுத்த வானத்தின்பால், தன் ஜலாலை (மகாத்மிய அருளை) அனுப்பி வைக்கின்றான். இரவில் மூன்றிலொரு பகுதி நேரம் கழிந்ததும், தன் அடியார்களை நோக்கி "உங்களில் யாரேனும் என்னைக் கூப்பிட்டு, விண்ணப்பித்துக் கொள்பவர் இருக்கிறீரா? நான் அவருடைய விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்கிறேன்; இன்னும் யாரேனும் என்னிடம் (ஏதேனும்) கேட்டுக் கொள்பவர் இருக்கிறீரா? அவருக்கு அதை நான் அளிக்கின்றேன். இன்னும், மன்

† ஸஹிஹைன், மிஷ்காத்

ணிப்பு தேடுபவர் யாரேனும் இருக்கின்றீரா? நான் அவருக்கு மன்னிப்பு அளிக்கிறேன்'' என்று திருவுளமாகி அழைக்கின்றான்.

"துஆ கபூல் ஆவதற்குரிய நேரமானது, இரவின் பிற்பகுதி நேரமாகும்'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

× ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், புனித ரமலான் மாதத்தில், ஸஹாபாக்க ளெல்லோரும் தராவீஹ் தொழுகை நிறைவேற்ற வேண்டுமென்று, உற்சாகம் ஊட்டுகிறவர்களா யிருந்து வந்தார்கள். இன்னும் "யாரேனு மொருவர், தன் ஈமானை நேர்மை செய்து கொள்வதற்காகவும், தவாபு (நன்மை) அடைவதற்காகவும் தொழுகை நிறைவேற்றுவாரானல், அவருடைய முன்னேய பாபங்களெல்லாம் மன்னிக்கப்பட்டு விடுகின்றன'' என்று திருவுளமானர்கள்.

குறிப்பு:—

‡ நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், பாலோக யாத்திரை புரிந்து (வபாத்தான) பிறகு, அவர்களது ஜீவியத்துக்குப் பின்— ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களுடைய கிலாபத் காலத்தில், இதே ரீதியில் தான் தொழுகை முறைகள் இருந்து வந்தன. பிறகு ஹஜ்றத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாபத் ஆரம்ப காலத்திலும், ஸஹாபாக்கள் இதேமுறையில் தான் அமல் செய்து வந்தார்கள். ஆனல் அதன் பிறகே, தராவீஹ் தொழுகையை ஜமாஅத்து கூடி தொழுதுக் கொள்ளத் தொடங்கினர்கள்.

+ இந்த வழக்கம் எப்படி நிலை நின்று விட்டதென்றால், ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது கிலாபத்துடைய காலத்தில், ஓர் இரவு, மஸ்ஜிதே நபவீ பக்கமாக விஜயம் செய்தார்கள். அப்போது (மஸ்ஜிதில் கூடி) ஜனங்கள், தராவீஹ் தொழுகையை தனித்தனியே இருந்து தொழுதுக் கொண்டிருப்பதை கண்ணால் கண்டார்கள். இன்னும் சில ஸஹாபிகள், ஜமாஅத்தாக சேர்ந்து தொழுதுக் கொண்டிருப்பதையும் கண்டார்கள். இதைக் கண்ட ஹஜ்ரத் உமர் (ரலி) ஜனங்களை நோக்கி, "நீங்கள் இப்படி தொழுதுக் கொள்வதைவிட, எல்லோரும் ஒன்று சேர்ந்து ஜமாஅத்தாக கூடி, தராவீஹைத் தொழுதுக் கொண்டால், மிகவும் நேர்மையா யிருக்குமே'' என்று சொன்னர்கள்.

மேலும் அவ்வாறே, ஹஜ்றத் உமர் (ரலி) ஜனங்களை யெல்லாம் ஓரிடத்தில் கூட்டமாகச் சேர்த்து, அபீஇப்னு கஅப் (ரலி) என்பவரை இமாமாக்கி வைத்து, தொழ உத்தரவு கொடுத்தார்கள். அதன்

× முஸ்லிம், மிஷ்காத்.
‡ முஸ்லிம், மிஷ்காத்
+ புகாரி, மிஷ்காத்

187076

பிறகு மற்றொரு இரவும் ஊர் சுற்றி வேவு பார்த்துக் கொண்டுவர புறப் பட்டார்கள். அப்போது எல்லா ஜனங்களும் ஒன்ருகச் சேர்ந்து ஜமா அத்தாக தொழுதுக் கொண்டிருந்தார்கள். இதனைக் கண்ணுற்று "ஆம்; இது மிகவும் சிறந்த முறை" என்று சொன்னார்கள்.

÷ ஹஜ்றத் உமர் (ரலி) அவர்கள், அபீஇப்னு கஅபையும், தமீம் தாரீயையும் அழைத்து "நீங்கள் ரமலானில், ஜனங்களுக்கு இமாமாக இருந்து பதிஞெரு ரக்கஅத்தை தராவீஹ்-8-வித்ரு-3 தொழ வைப்பீர்களாக" என்று உத்தர விட்டார்கள்.

÷ முஅத்தா இமாம் மாலிக், மிஷ்காத்

இஸ்லாமின் தறுத்தீபு

கோட்டாறு. பு. ஷெய்கு அபூபக்கர் ஆலிம் ஸாஹிபு

உச்சி திறந்து நுங்களும்மத்தோர் தாமிருந்தால்
வச்செனக் கேறுகின்றன வாகனமா மென்றனனே
இடது கையிற் தண்ணீரை யெடுத்துக் குடிக்கின்றதும்
இடது காலிற் செருப்பை யெதிர்த்து முந்தப் போடுவதும்
கஃபாவை நோக்கி யெதிர் கைக்கு நீர் கொள்ளுவதுக்
தகுமாக வேயெனக்குச் சந்தோஷ மென்றுரைத்தான்
நின்று தண்ணீ ருண்ணுவது நின்று நீர்ச் செய்யுவதும்
என்று மெனக் கேமிகவு மேற்ற அழக தென்றான்
முன்கை விரலை நெட்டி முறிக்கின்ற திங்கெனக்குத்
தென்போற் றசுபீஹு செய்கின்றதா மென்றனனே

மாநிலம் மறக்க முடியாத மாவீரர்

[9]

சுடர் விட்டுப் பிரகாசிக்கும் விளக்கு பற்றிய பரிசோதனை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எடிசனின் திட்டம் பற்றி அவநம்பிக்கை நிலவி வந்தது. பத்திரிகை விமர்சனங்களும் எடிசனைக் கிண்டல் செய்யும் தோரணையில் அமைந்திருந்தன. அவரது திட்டம் வெற்றி பெற்றதும் பொதுஜன அபிப்பிராயம் அவருக்குச் சாதகமாகத் திரும்பியது. எடிசன் கம்பெனியின் தலைமைக் காரியாலயம் இரவு வேளைகளில் நகரப் பிரபலஸ்தர்களும் பிரமுகர்களும் ஒன்றுகூடும் ஸ்தலமாக பரிணமித்தது. விளையாட்டு பொம்மைகள் உள்ள இடத்தை குழந்தைகள் வட்டமிடுவது போல, 'மின்சார விளக்கு' காட்சியைக் காண்பதற்காக வழக்கறிஞர்களும், பணக்காரர்களும், நடிகர்களும், டாக்டர்களும் ஒன்றுகூடத் தலைப்பட்டனர்.

ஆயினும், இன்னும் சரியான விளம்பரம் செய்யப்படவில்லை. டைரக்டர்களின் வற்புறுத்தலுக் கிணங்க, விருந்து வைபவங்களில் எடிசன் கலந்துகொள்ள ஆரம்பித்தார். இதன் மூலம் செல்வாக்கு மிகுந்த பிரஜைகள் சிலரின் சினேகத்தை அவர் சம்பாதித்துக் கொண்டார். அத்தகைய விருந்து வைபவங்களி லொன்றில் டபிள்யூ. எச். வாண்டர் பில்ட் என்னும் லட்சாதிபதி தமது புதிய மாளிகையில் தனி டைனமோ அமைக்குமாறு எடிசனைத் தூண்டினார். மாளிகையில் டைனமோ நிர்மாணிக்கப்பட்டு பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.

கலை மண்டபத்தில் நிர்மாணிக்கப் பட்டிருந்த மின்சாரக் கம்பியில் ஏற்பட்ட கோளாறின் காரணமாகப் பட்டுத் துணியால் செய்யப் பட்டிருந்த அலங்காரங்கள் தீப்பற்றிச் சேதமுற்றன. வாண்டர் பில்ட் அம்மையார் மூர்ச்சையானார். டைனமோ அங்கிருந்து அகற்றப் படும் வரையில் அக்கட்டிடத்தில் வசிக்க முடியாது என அவர் கூறினார். எடிசன் கம்பெனியில் வாண்டர் பில்ட் பங்குதாரராக ஆனபோதிலும் அனேக ஆண்டுகள்வரை அவரது மாளிகையில் 'காஸ்' விளக்குகள்தான் எரிந்து கொண்டிருந்தன.

விருந்துக்குப் பிறகு பிரசங்கங்கள் நிகழ்த்துவதையோ, அவ்வாறான பிரசங்கங்களைக் கேட்பதையோ அவர் அறவே வெறுத்தார். விருந்து மண்டபத்திலிருந்து கூடிய விரைவில் அவர் வெளியேறி வந்தார். பேர்ல் வீதியில் தாம் நிர்மாணித்திருந்த மின்சார நிலையத்தில் எல்லா வேலைகளையும் அவரே மேற்பார்வையிட்டு வந்தார். நீண்ட அங்கி அணிந்து கழுத்தைச் சுற்றிக் கைகுட்டை கட்டிக் கொண்டு

அங்கும் இங்கும் அவர் அலைந்து திரிந்து கொண்டிருப்பதைப் பார்த்து இராக்கால தொழிலாளர்களுக்குப் பழக்கமாகி விட்டது.

அந்த முதல் மின்சார நிலையத்தை நிர்மாணிப்பது பெரும் காரியமாக விருந்தது. "எனது வாழ்விலே நான் மேற்கொண்ட மிக வும் துணிச்சலான காரியம்" என்று பின்னர் இதைப்பற்றிக் குறிப் பிடும்போது அவர் கூறினர். அவரது கௌரவம், அவரது பணம், அவரது நண்பர்கள் அவர்மீது வைத்திருந்த நம்பிக்கை, அவர்மீது பொதுமக்களுக்கிருந்த விசுவாசம் ஆகியவை அனைத்தும் அந்த முயற்சியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தன. 'காஸ்' கட்டணத்தைவிட மின்சாரச் செலவு மிகக் குறைவாக இருப்பதோடு 'காஸ்' விளக்குகளை விட மின்சார விளக்குகள் சக்தியுள்ளவைகளாகவும் இருக்கச் செய்ய வேண்டும் என்பதை எடிசன் உணர்ந்து கொண்டார். கட்டண மின்றியே வீடுகளுக்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்க அவர் முன்வந்தார். மீட்டருக்காகவும் எவ்வித 'டிபாசிட்' தொகையும் அவர் கோரவில்லை. விளக்குப் பிரகாசத்துடன் எரிந்து திருப்தி அளித்தாலன்றி மீட்டர் கட்டணத்தை உபயோகிப்போர் செலுத்தத் தேவையில்லை என்று அவர் தெரிவித்தார். 'காஸ்' கட்டணத்தை விட மின்சாரச் செலவு குறைந்ததாக இருக்கும் என்று அவர் உத்தர வாதமும் அளித்தார்.

முதல் பரிசோதனை நிகழ்த்தப்படும் காலம் நெருங்கியதும் உல கத்தவரின் கவனம் முழுவதும் நியூயார்க்கின் கிழக்குப் பகுதியி லுள்ள அந்த ஒரு மைல் விஸ்தீரண பிரதேசத்தின் மீது குவிந் தது! பெரிய நிகழ்ச்சிகள் எதிர் பார்க்கப்பட்டன. எடிசன் கம்பெனியில் ஒரு பங்கு விலை நூறு டாலரிலிருந்து மூவாயிரத்து ஐந்நூறு டாலராக அதிகரித்தது. எடிசனின் ஏற்பாடு வெற்றி யளிக்க வில்லையாயின், அது சரித்திரம் கண்டிராத மாபெரும் பகி ரங்க தோல்வியாக இருந்திருக்கும்.

1882-ம் வருடம் செப்டம்பர் மாதம் 4-ந் தேதி திங்கட்கிழமை யன்று புது ஏற்பாடு பூர்த்தியாகி விட்டதென அறிவிக்கப்பட்டது. மின்சார நிலையத்திலே கரியைப் போட்டுத் தொழிலாளர்கள் கொளுத் தினர்; வெந்நீர்க் கொப்பரை (Boiler) யிலிருந்து பிரம்மாண்டமான மின்சார உற்பத்திக் கருவிகளுக்கு நீராவி சென்றது. டைன மோக்கள் அதி வேகமாக இயங்கின. பூமிக்கடியில் நிர்மாணிக்கப்பட் டிருந்த எண்பதினாயிரம் அடி நீளமான கம்பிகளுக்கு மின்சாரம் பாய்ச்சுவதற்கான பிரதான 'ஸ்விச்' அருகே எடிசன் சென்றார். நியூயார்க் வீதிகளுக்கும் வீடுகளுக்கும் அடியில் சக்தி வாய்ந்த மின்சாரத்தைப் பாய்ச்சும் போது அவரது மனம் படக், படக் என அடித்தது. ஆனல், அசம்பாவிதம் எதுவும் நிகழவில்லை. 'ஸ்விச்'சை அவர் இழுத்ததும் அந்த பிரதேச வீட்டு ஜன்னல்களிலிருந்து பிர காசமான ஒளி வெளிவந்தது.

(தொடரும்)

17 முறை படையெடுத்த பாரசீக மன்னன்

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

சிறுவர்களே! நாம் வசிக்கும் இந்திய நாட்டுக்கு 'பாரத நாடு' என்றும் பெயருண்டு. பண்டைய பாரத நாட்டில், கல்வி, அறிவு, ஆராய்ச்சி மிகுந்து இருந்ததே அல்லாமல், ராஜ தந்திரமோ ராணுவ பலமோ மிகுந்து இல்லை.

புராதன இந்தியாவில் அநேக ராஜாக்கள் இருந்தனர். அவர்கள், பணம் காசு செல்வத்தை சேகரித்து சுகபோகமாய் வாழ்வதிலும், தங்கள் குடும்ப விஷயங்களில் சண்டை சச்சரவு புரிவதிலும் சதா ஈடுபட்டிருந்தனரே அல்லாது, தேசத்தை ஒன்று படுத்தி, குடிபடைகளை சம்ரக்ஷித்து, நாட்டை க்ஷேமமாய் வைத்துக் கொள்ள வேண்டுமென்று சிரத்தை கொள்ளவில்லை.

மகாபாரத யுத்தங்களுக்கும், சேர-சோழ-பாண்டிய மன்னர்களின் சண்டைகளுக்கும் காரணம், இத்தகைய ஒற்றுமை இன்மையே யாகும். இதனால் அக்காலத்தில், இந்திய நாட்டுப் பண்பாடே, உறுதி இல்லாமல் இருந்தது.

அன்னிய நாட்டார் படையெடுப்பு

இந்தியாவுக்கு வடக்கே பாரசீகர்களின் நாடு இருந்துவருகிறது. அதை அடுத்து, சமீபத்தில், ஆப்கானிஸ்தான் என்ற நாடும் ஒன்று உண்டு. நம் இந்திய நாடு, க்ஷீண தசையில் இருந்த அந்தக் காலத்தில், அந்த ஆப்கானிஸ்தானம் வலிமை யுடைய அரசாங்கமாய் இருந்தது.

அந்த நாட்டார், பாரசீக மொழியும், 'புஷ்த்து' பாஷையும் பேசி வந்தார்கள். அவர்களுடைய அரசாங்கத்தின் ராஜதானி (தலைநகரம்) 'கஜனி' என்பதாகும். அந்த 'கஜ்னி' என்னும் நகரையும் அதைச் சேர்ந்த மலைநாடுகளையும் "ஸுல்தான் மஹ்மூத்" என்ற இளம் முஸ்லிம் பட்டாணிய மன்னன் ஆண்டு வந்தான்.

கஜ்னி மன்னனின் கீர்த்தி பிறநாடுகளிலும் பரவி இருந்தது. **கஜ்னி** மன்னன் வீரத்தில் சிறந்தவன். எனவே வீரர்களை ஆதரித்துக்

காப்பாற்றுவான். ஆதலில் பராக்கிரம சாலிகள் அவனுக்கு உடந்தையாக இருந்து வந்தனர். வீரத்தை வீரம் மெச்சும் அல்லவா?

17-முறை படையெடுத்தான் வீரன்

இளம் மன்னனுன ஸுல்தான் மஹ்மூத், மிகவும் துணிச்சலான பேர்வழி. வீரதீரத்திலும், போர்த் தந்திரங்களிலும் கெட்டிக் காரன். உற்சாகமும் தீரமும் உடையவன். யாருக்கும் பயப்பட மாட்டான். அவனுக்கு மற்றவர்கள் பயப்படுவார்கள்.

ஸுல்தான் மஹ்மூத், தன்னுடைய ராஜ்யத்தை வெகு தூரம் பரப்ப வேண்டும் என்று ஆசைப்பட்டான். அடுத்துள்ள நாடுகளில் படைகளை கொண்டு சென்று, நயத்தாலும் பயத்தாலும் நாடுகளை பிடித்து வந்தான்.

செழுமை நிறைந்த நம் நாடாகிய ஹிந்துஸ்தானத்தைப் பிடித்து, இஸ்லாமியத்தின் பெயரால், இங்கு ஆட்சி செலுத்த வேண்டுமென்று விரும்பினுன். எனவே, தன் வீர முஸ்லிம் படைகளைத் திரட்டிக் கொண்டு வந்து, ஹிந்துஸ்தானத்தின் மீது படையெடுத்தான்.

இந்தியர்களும், வீரத்துடன் போரிட்டுத் தடுத்தனர். ஸுல்தான் மஹ்மூதின் படை தோல்வியுற்றுத் திரும்பிப் போய்விட்டது. எனினும் கஜ்னி மன்னன் மஹ்மூத், மனம் சோர்ந்துவிட வில்லை. மீண்டும் மீண்டும் பன்முறை படையெடுத்து வந்து இந்தியாவை தாக்கினுன்.

இவ்வாருக, பாரசீக வம்ச கஜ்னி மன்னன் ஸுல்தான் மஹ்மூத் ஒன்று இரண்டல்ல; சரியாக பதினேழு முறை, ஹிந்துஸ்தானத்தின் மீது படையெடுத்து வந்து தாக்கினுன். இந்தியாவின் பெரும் பெரும் ராஜாக்களும், அவனது வீரப்படையை எதிர்க்க மாட்டாது, தோல்வியடைந்து விட்டனர். பன்முறை படையெடுத்த போது, இம் முஸ்லிம் மன்னன், பல வகையில் கஷ்ட நஷ்டம் அடைய நேரிட்டதென்ருலும், ஊக்கத்தை அவன் கைவிட வில்லை.

அறிவாளிகளிடம் அன்புடையவன்

ஸுல்தான் மஹ்மூத் கஜ்னி, அறிவு உடையவன். எனவே, கல்வி அறிவில் கை தேர்ந்த மேதாவிகளை அபிமானித்து ஆதரித்து வந்தான். மவ்லவிகளையும் ஆலிம்களையும் பாராட்டுவான். தன்னுடைய தர்பாரில், அறிஞர்களை சேர்த்து வைத்துக் கொண்டு, கல்வி அறிவு பற்றி சர்ச்சை செய்யச் சொல்லி, அந்த விவாதத்தில் தானும் கலந்து கொண்டு, இன்பம் அடைவான். அறிவாளிகளின் வறுமைக் கஷ்டத்தைப் போக்க தாராளமாக பண உதவி செய்வான்.

பிர்தவ்ஸியின் அரிய கவிதை

மஹ்மூத் கஜ்னியுடைய தர்பாரில் (1) பிர்தவ்ஸி, (2) அன்ஸரி, (3) அபூ ரைஹான் என்ற பாரசீகப் பெரும் புலவர்களும் இருந்து வந்தனர். "என்னுடைய ராஜகுல வீரவரலாறுகளை விளக்கும் கவிதைக் களஞ்சியப் பெரிய நூல் ஒன்றை இயற்றுங்கள்" என்று புலவர்களுக்குக் கட்டளை யிட்டான்.

ஈரான் என்னும் பாரசீக நாட்டைச் சேர்ந்த 'பிர்தவ்ஸி' என்னும் பெரும் புலவர், இந்தப் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொள்வதாக முன் வந்தார். சுல்தான் மஹ்மூதும் அப்புலவரை ஆதரித்து, எல்லோரும் மெச்சும் வண்ணம், காவியம் இயற்றினால் ஒவ்வொரு பாட்டுக்கு ஒவ்வொரு தங்க நாணயம் (மொஹ்ரா) விகிதம் கணக்கிட்டு இனம் தருவதாக வாக்குறுதி செய்தான்.

"ஷாஹ்நாமா"

புலவர் பெருமான் பிர்தவ்ஸி, முப்பது வருஷம் பாடுபட்டு "ஷாஹ் நாமா" என்றொரு காவியத்தை பாரசீக மொழியில் இயற்றினார். அதில் 60 ஆயிரம் பாட்டுகள் உண்டு.

(ஆயிரம் வருஷமாகியும் இப்போது அதைப்படிப்பவர், பாராட்டிப் புகழ்கின்றனர். ஆண்டு தோறும் ஈரானில் விழாவும் கொண்டாடுகின்றனர்).

மஹ்மூது மன்னனிடம் ஹஸன் மைமந்தி என்ற மந்திரி ஒருவன் இருந்தான். இவன் பிர்தவ்ஸிக்கு விரோதி. எனவே, புலவன் பிர்தவ்ஸ் இயற்றிய 'ஷாஹ் நாமா' அவ்வளவு சேர்த்தியான தல்ல என்று மன்னனிடம் சொல்லி, மனதை மாற்றி விட்டான்.

தங்க நாணய மில்லை, வெள்ளிக் காசு.

எனவே, சுல்தான் மஹ்மூது, வாக்களித்த பிரகாரம், புலவன் பிர்தவ்ஸிக்கு 60 ஆயிரம் தங்க நாணயம் கொடுக்காமல், அத்தனை வெள்ளிக் காசுகள் கொடுத்தான். அதைக் கண்டு பிர்தவ்ஸிக்கு மனக் கஷ்டம் ஏற்பட்டது. அவ்வளவு பணத்தையும், அந்த தர்பாரிலிருந்த வேலைக்காரர்களுக்கும் ஊழியர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்து விட்டார்.

சொன்ன சொல்லை மாற்றி வாக்குறுதி மீறிய மன்னனை, புலவர் பிர்தவ்ஸி குறை கூறி, ஒரே ஒரு பாட்டு இயற்றிக் கொடுத்து விட்டு, ஊரை விட்டு எங்கோ தலை மறைத்துப் போய் விட்டார். அந்த பாட்டின் கருத்தாவது:—

"கசப்பாக இருக்கும் (எட்டிக்காய் போன்ற) ஒரு கனியின் செடியை, அழகான பூங்கா வனத்தில் (கனித் தோட்டத்தில்) வைத்து, நல்ல தண்ணீர் ஊற்றி வளர்த்தாலும், அச்செடி பெரி

தானால், அதில் கசப்பான எட்டிக் கனிதான் உண்டாகும். (இனிய மாம்பழம் உண்டாக மாட்டாது.) இதைப் போல் அற்ப குலத்தில் பிறந்தவன் அரசனாகி விட்டாலும், அற்ப புத்தி போகாது.''

இறுதி காலம்

சுல்தான் மஹ்மூத், புலவன் பிர்தவ்ஸியின் தகாத நடத்தையைக் குறித்து, முதலில் கோபம் அடைந்தான். பிறகு கொஞ்ச நாள் கழித்து, பிர்தவ்ஸியின் புலமைத் தன்மை புகழப்பட்டதை அறிந்து, அவரிடம் மரியாதை கொண்டான்.

பிர்தவ்ஸியின் இருப்பிடத்தை, மிகப் பிரயாசையில் கண்டு பிடித்து, முன் வாக்களித்த பிரகாரம் 60 ஆயிரம் தங்க நாணயங்களை பரிசாக கொடுத்தனுப்பினான். இந்த தங்க மோஹ்ராப் பணம், பிர்தவ்ஸியுடைய வீட்டுக்குப் போய்ச் சேர்ந்த போது, இறந்து போய் விட்ட பிர்தவ்ஸியின் பிரேதப் பெட்டியான ஜனாஸா, அவ்வீட்டின் பின்வாசல் வழியாக கப்ரிஸ்தானில் புதைப்பதற்காக, வெளியே கொண்டு போகப்பட்டு விட்டது.

மஜ்மூஉ மவ்லூது

இதில் றஸூலுல்லாஹ்வுடைய மவ்லூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவ்லூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மவ்லூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மழை பைத்து, ஜூத்பிலுத்பிக என்னும் முனாஜாத், பீஹுப்பி ஸையிதினா பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் எழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது.
கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1—00

ஷை மூன்று மௌலூதுகளும் அறபியில்
கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. விலை ரூ. 1—80

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

கீமியாயே ஸஆதத்து

தமிழ் மொழிபெயர்ப்பு.

1-வது, 2-வது, 3-வது, 4-வது ஆக 4-வால்யங்கள்.

இந்த கிதாபில் உள்ள சில விஷயங்களாவன:—

1-வது, தன்னையும் தனக்கு ஆதாரமான தலைவனையும் அறியாமல் பின்னை யொன்றை தானென்றும் தலைவனென்றும் கருதுகிற பேர்களுக்கு இக்கிதாபு உணர்வை வர வைக்கும்.

2-வது, அநாதாரபதர் மொழிகளால் நிறைந்த சில அஞ்ஞான புத்தகங்களை மெஞ்ஞான பொக்கிஷங்களென மதித்து மருண்டுகிடக்கின்ற மதியீனர்களின் மனதைத் திருப்பும்.

3-வது, இகபரங்கள் இன்னதென்று றறியாமல் இலோக இச்சைகளிலேயே மூழ்கி இரவும் பகலும் இதற்கே தொண்டு செய்து பரலோக வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கா திருக்கிற பேதை மாந்தர்களுக்கு இகபர விருப்பத்தை யூட்டும்.

4-வது, இபாதத்து செய்கிறவர்களுக்கு சுன்னத்து ஜமாஅத்துகளின் இஃதிகாது, இல்மை தேடல், ஒலுவு, முழுக்கு, தயம்மம் முதலிய சுத்தி வகைகள், தொழுகை, நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு, குர்ஆன் ஓதல், திக்று அவ்றாது இவைகளின் அஹ்காம்களும் அஸ்றாருகளும் சொல்லப்பட்டிருப்பதால், இது அமல் செய்கிறவர்களுக்கு மிகவும் பிரயோஜனத்தைக் கொடுக்கும். இதன் அருமை கிதாபை பார்த்தால் தான் அறியலாம்.

இதன் 1-வது வால்யத்தில் இபாதத்துகளுடைய பயானும் 2-வது வால்யத்தில் முஆமலாத்துடைய பயானும் 3-வது வால்யத்தில் முஹ்லிகாத்தின் பயானும் 4-வது வால்யத்தில் முன்ஜியாத்துடைய பயானும் அடங்கியிருக்கின்றன.

1-வது வால்யம் புதிய அச்சு கலிகோ பைண்டு விலை ரூ. 3-00

2-வது வால்யம் புதிய அச்சு கலிகோ பைண்டு விலை ரூ. 3-60

3-வது வால்யம் புதிய அச்சு கலிகோ பைண்டு விலை ரூ. 5-00

4-வது வால்யம் புதிய அச்சு (அச்சாகிறது)

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.